Not for sale

ஜனவரி - பிப்ரவரி 2017

தமிழாக்கம்

# The Herald
## of Christ's Kingdom



For Private Circulation only

# சில ஆழ்ந்த அறிவுரைகள்


எபிரெயர் ஆறாம் அதிகாரத்தில் காணப்படும் கட்டம் ● ஒருவரையொருவர் தேற்றுங்கள்

ரூத் புத்தகத்திலுள்ள கருத்துக்கள் ● எசேக்கியாவிடமிருந்து பாடங்கள்

யாக்கோபின் திரும்புதல் ● பெஸ்துவின் நீதி

சில ஆழ்ந்த அறிவுரைகள்

# ஆதியிலே



புதிய ஏற்பாட்டின் பெரும்பாலான பகுதி, தேவ பக்திக்கான அறிவுரைகளே. இன்றும், புதிய ஏற்பாட்டின் அஸ்திபாரமானது, இயேசுவின் உபதேசம், ஆலோசனைகள், மற்றும் அவருடைய வார்த்தைகளை மீண்டும் மீண்டும் கொடுக்கப்படும் அறிவுரைகளினால் பிண்ணி பிணைந்திருப்பதை, சுவிசேஷமும் அறிக்கையிடுகிறது. இயேசு நடப்பித்த விதத்தைப்பற்றிய பதிவுகளில், எடுத்துக்காட்டின் வழியாக அறிவுரைகள் கூறப்பட்டுள்ளது.

சில ஆழ்ந்த அறிவுரைகள் என்ற இந்தப் பிரதியில், புதிய ஏற்பாட்டு நிருபங்களிலிருந்தும், பழைய ஏற்பாட்டின் சில நிகழ்ச்சி விரிவுரைகளிலிருந்தும் சில அறிவுரைகளை நாம் காண்கிறோம். சில ஆழ்ந்த பாடங்களோடு தொடர்புள்ள அந்த அறிவுரைகளைக் கண்டுபிடிப்பதற்கு, அதற்குத் தொடர்புள்ள வேதபகுதிகள் அல்லது அனுபவங்களின் விவரங்களை நாம் கருத்தில் கொள்கிறோம்.

"எபிரெயர் ஆறாம் அதிகாரத்தில் காணப்படும் முக்கியமான கட்டம்" என்ற நம்முடைய முதல் கட்டுரை, வசனங்களைக்குறித்து ஆழமாக யோசிப்பதற்கு, பவுல் நமக்களிக்கும் உற்சாகத்தைப்பற்றி நோக்குகிறது. மெல்கிசெதேக்கைப்பற்றி உரையாடும்போது, அவருடைய ஆலோசனை கொடுக்கப் படுகிறது. இந்தக் கலந்துரையாடல் மற்றும் இந்தச் சாட்சிகளுக்கு பவுலின் வேண்டுகோளுக்கான நோக்கத்தையும் நாம் இங்குக் கவனத்தில் கொள்கிறோம்.

"ஒருவரையொருவர் தேற்றுங்கள்" என்ற நம்முடைய இரண்டாம் கட்டுரை, கிறிஸ்துவின் திரும்புதலின்போது, பரிசுத்தவான்கள் பெறும் பரிசைப்பற்றி நாம் நன்கு அறிந்திருக்கும் வேத பகுதியான 1 தெசலோனிக்கேயர் 4-ஆம் அதிகாரத்தைக் கண்ணோக்குகிறது. மிகச் சமீபத்தில் சகோதரர்கள் அனுபவித்த இழப்புகளுக்கான ஆறுதல் அளிப்பதே பவுலின் கவனமாக இருந்தது, இப்படிச் செய்வதினால், சகோதரர்களின் மனதில் ஆழமான ஈடுபாட்டைக்கொடுக்கும் சில குறிப்புகளை பவுல் முன் வைக்கிறார். அவருடைய வார்த்தைகளை எவ்வளவு கவனமாகக் கருத்தில் கொள்கிறோமோ, கிறிஸ்துவின் திரும்புதலைக்குறித்த நோக்கங்களில் அவ்வளவு தெளிவான புரிந்து கொள்ளுதலைப் பெறலாம்.

நம்முடைய அடுத்த கட்டுரை, ரூத்தைப் பற்றிய ஓர் அருமையான எடுத்துக்காட்டாகும். இது ஒரு நேயமான கதை. ஒரு நேயமான நிகழ்ச்சி விரிவுரையாக இருந்தாலும் விசேஷமாக புறஜாதிகள் கிறிஸ்தவர்களாக மாறுவதற்கு அர்த்தமுள்ள சில உருவகமான பாடங்களும் அதில் காணப்படுகிறது.

விசுவாசம், மனமார்ந்த (உண்மை) நிலை மற்றும் மெய்ப்பற்றுக்குரிய எடுத்துக்காட்டுகளை, இஸ்ரயேலை ஆண்ட சிறப்புமிக்க இராஜாக்களில் ஒருவராகிய "எசேக்கியாவிடமிருந்து பாடங்கள்" என்ற கட்டுரை நமக்குத் தருகிறார். இஸ்ரயேலுக்கு இனிவரக்கூடிய உபத்திரவத்தின் காலத்தைப்போல, அவருடைய தேசத்தை இடர்பாட்டுக்குள் உட்படுத்திய ஓர் இடுக்கமான நெருக்கடியான சூழ்நிலையை அவர் சந்தித்தார்.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு யாக்கோபு திரும்பினபோது, யேகோவா தேவனை ஆராதிக்க தன்னை முழுமையாக ஒப்புக்கொடுத்ததை, "யாக்கோபின் திரும்புதல்" குறிப்பிடுகிறது. சுவிசேஷயுகத்திலிருந்து ஆயிர வருட ஆண்டுவரையில் இடைமாறுதலில் காணப்படும் தொடர்ச்சியான வளர்ச்சிகளை அவருடைய அனுபவங்கள் அடையாளப் படுத்துகிறது. அப்போது இஸ்ரயேல் முழுமையாக தேவனை சேவிப்பதற்கு தங்களை ஒப்புக்கொடுக்கும்.

"பெஸ்துவின் நீதி" என்ற நம்முடைய கடைசி கட்டுரை, நாம் சகோதரர்களாக செயல்படுவதைக் குறித்து தேவையான அறிவுரைகளைத் தருகிறது. இது இந்நாள் வரைக்கும் வாழ்ந்து கொண்டிருக்கும் பிரிந்து போன ஓர் அன்பான சகோதரனின் எழுத்துக்கள்.

இந்தக் கட்டுரைகள், தேவனுடைய வார்த்தையின் நல்லாலோசனைகளை நாம் புரிந்து கொள்வதை மேம்படுத்தி அதைப்பின்பற்றுவதினால் அனைவரையும் முன்னேறச் செய்யும் என்று நாம் நம்புகிறோம்.

**ஜனவரி - பிப்ரவரி 2017**


**எபிரெயர் ஆறில் காணப்படும் முக்கியமான கட்டம்** 2
முதிர்ச்சியை நோக்கி

**ஒருவரையொருவர் தேற்றுங்கள்** 7
ஒருமித்த ஐக்கியம்

**ரூத் புத்தகத்திலுள்ள கருத்துக்கள்** 12
தாவீதின் கொள்ளுப்பாட்டி

**எசேக்கியாவிடமிருந்து பாடங்கள்** 15
நல்ல இருதயம் கொண்ட ஓர் இராஜா

**யாக்கோபின் திரும்புதல்** 20
விடியல் மட்டும் போராடுதல்

**பெஸ்துவின் நீதி** 28
ரோம சட்டத்தின் கோட்பாடு

**தீர்க்கதரிசனத்தில் இன்று** 33
கிறிஸ்தவ உபத்திரவம்

முதிர்ச்சியை நோக்கி

# எபிரெயர் ஆறாம் அதிகாரத்தில் காணப்படும் முக்கியமான கட்டம்

"பாலுண்கிறவன் குழந்தையாய் இருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கம் இல்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானோந்திரியங்களை உடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும். ஆகையால், கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம் விட்டு " (எபிரெயர் 5:13, 14; 6:1).

அப்போஸ்தலனாகிய பவுல் நம்முடைய விசுவாசத்தின் அடிப்படையை வகைவகையாகச் சொல்லும் காரியங்கள், உண்மையில் எபிரெயர் ஆறாம் அதிகாரத்தில் தொடரும் வாதத்திற்கு இடையில் புகுத்தப்பட்டதாகும். நியாயப்பிரமாணத்தின் ஊழியத்தைக் காட்டிலும், இயேசுவின் ஊழியம் மேலானது என்று பவுல் விவரித்து அதை ஒதுக்கினார் (நியாயப்பிரமாணத்தின் ஊழியத்தை). இப்படியாக, எபிரெய சகோதரர்கள் நிழலும், நிஜமான யுகத்திலிருந்து, இவைகளின் நிறைவேற்றங்களாக இருக்கும் சுவிசேஷயுகத்தின் உண்மையான ஊழியத்திற்கு முன் செல்ல வேண்டுமென்று பவுல் அறிவுரைக் கூறினார்.

அதற்குப்பின் பவுல் தன்னுடைய கருத்துரையாடலை ஒரு கணம் நிறுத்தினார். இவைகள் புரிந்துகொள்ள முடியாமல் ஆழமாக இருப்பதினாலல்ல, மாறாக அநேகர் இவ்வழியில், தங்களுடைய சிந்தனைகளைப் பயிற்றுவிக்காத காரணத்தினாலே அவர் பேசிக்கொண்டிருந்த விவரங்கள், எபிரெய வாசகர்களின் சிந்தைகளில் பெரும் பாரத்தைச் சுமத்திவிடுமோவென்று எண்ணினார். ஆகவே பவுல் தன்னுடைய பாடத்தை, சற்று நேரத்திற்குக் குறுக்கிட்டு, வேதநூலை ஆழமாகப் புரிந்துகொள்ளுதலைப் பெற்றுக் கொள்வதற்கு நம் அனைவரையும் வற்புறுத்துகிறார். இதன் வழியாக கிறிஸ்துவினால் நமக்களிக்கப்பட்ட, சுவிசேஷ யுகத்தின் புதிய நம்பிக்கைகளை நாம் இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.

### மெல்கிசெதேக்

எபிரெயர் ஆறாம் அதிகாரத்தைப் பொறுத்த வரையில், பவுலின் முக்கிய பாடம், மெல்கிசெதேக் ஆகும். கிறிஸ்து, மெல்கிசெதேக்கைப்போல ஒரு ஆசாரியரானார் என்றும், இந்த ஆசாரியத்துவம் ஆரோனின் ஆசாரியத்துவத்தைக் காட்டிலும் மேலானது என்றும் அவர் குறிப்பிடுகிறார். இப்படியாக, ஆரோனிலிருந்து மெல்கிசெதேக்கிற்கு ஆசாரியத்துவத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. ஆனால் நியாயப்பிரமாண உடன்படிக்கையானது, ஆரோன் மற்றும் அவருடைய குமாரர்களோடு அதிகமாக பின்னி பிணைக்கப்பட்டிருந்ததினால், இப்படிப்பட்ட ஒரு அடிப்படையான முறைமாற்றமானது, பிரமாணத்திலும் மாற்றத்தைக் கட்டாயமாக ஏற்படுத்தியது." ஆசாரியத்துவம் மாற்றப்பட்டிருக்குமேயானால், நியாயப் பிரமாணமும் மாற்றப்பட வேண்டியதாகும்" (எபிரெயர் 7:12).

### மேலான கருத்து

யூத யுகத்திலிருந்து சுவிசேஷ யுகத்திற்கும் நியாயப்பிரமாணம், கடமை மற்றும் அடிமைத்தனத்தின் யுகத்திலிருந்து இயேசுவின் வாழ்க்கையினால் கிடைத்த இலவசமான பரிசினால் பெற்ற கிருபை, விடுதலை மற்றும் சுதந்திரமான யுகத்திற்கும் இடைமாறுதலின் காலத்தில் பவுல் வாழ்ந்து வந்தார். மேலும் வருங்கால வாய்ப்புகள் மற்றும் அவர் கண்ட காட்சியினால் சிலிர்ப்படைந்தார். ஆனால் அவருடைய சகோதரர்களின் சிந்தையிலுள்ள நியாயப்பிரமாணத்தை "நித்தியமான" உடன்படிக்கையோடுள்ள நிலையான தெய்வீக சட்டங்கள் மற்றும் "நித்தியமான" ஆசாரியத்துவம் (லேவியராகமம் 24:8, 9; யாத்திராகமம் 40:15; எண்ணாகமம் 25:13)-நீக்குவதே, அவருடைய ஊழிய வாழ்க்கை முழுவதுமாக நீடித்திருந்த போராட்டமாக இருந்தது. [நித்தியமான மற்றும் நிலையான என்ற வார்த்தையின் எபிரெய பதம் ஓலாம் (olam). ஸ்ட்ராங்ஸ் எண் 5769-இதற்கு மறையும் கட்டம் என்று பொருள்.

அதாவது நித்தியமாக என்ற பொருள் இதற்கு அவசியம் இல்லை. மாறாக ஒரு நீண்ட காலம் என்று பொருள் கூறலாம்] பவுலின் நிருபங்களில் இக்காரியம் மீண்டும் மீண்டுமாக காணப்படுகிறது, இங்கு சில எடுத்துக்காட்டுகளைக் காணலாம்.

❖ "ஆக்கினைத்தீர்ப்புக் கொடுக்கும் ஊழியம் மகிமையுள்ளதாயிருந்தால், நீதியைக் கொடுக்கும் ஊழியம் அதிக மகிமையுள்ளதாயிருக்குமே... மோசேயின் ஆகமங்கள் வாசிக்கப்படும் போது, இந்நாள்வரைக்கும் முக்காடு அவர்கள் இருதயத்தின் மேல் இருக்கிறதே" (2 கொரிந்தியர் 3:9, 15).

❖ "நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருக்க விரும்புகிற நீங்கள் நியாயப் பிரமாணம் சொல்லுகிறதைக் கேட்கவில்லையா? இதை எனக்குச் சொல்லுங்கள். ...சகோதரரே, நாம் ஈசாக்கைப்போல வாக்குத்தத்தத்துப் பிள்ளை களாயிருக்கிறோம். ... இப்படியிருக்க, சகோதரரே, நாம் அடிமையானவளுக்குப் பிள்ளைகளாயிராமல், சுயாதீனமுள்ளவளுக்கே பிள்ளைகளாயிருக்கிறோம்" (கலாத்தியர் 4:21, 28. 31; 5:1).

❖ "ஆகையால், யோஜனத்தையும் பானத்தையும் ... பண்டிகை நாளையும் ...மாதப்பிறப்பையும் ஓய்வ நாட்களையுங் குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக" (கொலோசெயர் 2:16).

எபிரெய புத்தகத்தைத் தவிர வேறெங்கும், இந்தக் கருத்து இவ்வளவு குறிப்பாகச் சொல்லப்பட்டதில்லை. இந்தப் புத்தகத்திலுள்ள முதல் அதிகாரத்தில், தூதர்களைக் காட்டிலும் இயேசுவின் மேலான நிலையைக்குறித்து பவுல் மெய்ப்பித்துக்காட்டுகிறார். இரண்டாம் அதிகாரத்தில் பவுல் நமக்குச் சுட்டிக்காட்டும் குறிப்பைக் கவனிக்கும் வரையில் இதைக்குறித்த ஆய்வுவுரை வித்தியாசமாகத் தோன்றுகிறது. "ஆகையால் . . . தேவதூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு விரோதமான ... தேவன் தாமே சாட்சி கொடுத்தது மாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப் போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம் " (எபிரெயர் 2:1-3). பவுலின் எபிரெய பார்வையாளர்கள் நன்கு அறிந்திருந்தபடி, நியாயப்பிரமாணம் தூதர்களினால் கொடுக்கப்பட்டது (அப்போஸ்தலர் 7:53;கலாத்தியர் 3:19). நியாயப்பிரமாணம் சுவிசேஷத்தினால் தள்ளி வைக்கப்பட்டது என்ற தன்னுடைய கருத்துக்கு பவுல் அடித்தளமிட்டார்.

இஸ்ரயேலுக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுப்பதற்குத் தேவன் பயன்படுத்தின ஊழியக்காரனாகிய மோசே மற்றும் குமாரனாகிய கிறிஸ்துவுக்கு இடையிலுள்ள மாறுபாடான இயல்புகளை, பவுல் மூன்றாம் அதிகாரத்தில் காட்டுகிறார் (வசனம் 5, 6). நான்காம் அதிகாரத்தில் கிறிஸ்துவுக்குள் நமக்காகக் காத்திருக்கும் இளைப்பாறுதலை மோசே அல்லது அவரைத் தொடர்ந்து வந்த யோசுவா (எபிரெயர் 4:8) இஸ்ரயேலுக்கு உண்மையான இளைப்பாறுதலைக் கொடுக்கவில்லை என்பதை அவர் சுட்டிக் காட்டுகிறார். அதே நேரத்தில் "நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதை யாயிருக்கக்கடவோம்." "ஆகையால், அந்தத் திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்து போகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக் கடவோம்" (எபிரெயர் 4:11). இப்படியாக, நாம் கிறிஸ்துவின் ஆசாரியத்துவத்திற்குள் அறிமுகப்படுத்தப் படுகிறோம். ஐந்தாம் அதிகாரத்திலருந்து ஏழாம் அதிகாரம் வரையில். இதைப்பற்றிய பாடத்தைக் காணலாம். இந்தப்பகுதியில், இந்த விவரத்திற்கு நம்முடைய கவனத்தைத் திருப்புகிறோம்.

**மெல்கிசெதேக்கைப்பற்றிய ஆய்வுரை**

ஐந்தாம் அதிகாரம் நான்காம் அதிகாரத்தின் முடிவோடு இணைந்துள்ளது. இதில் பவுல் நம்முடைய தேவைகள் மற்றும் பலவிளைவுகளுக்கு உதவுகிற நம்முடைய ஆசாரியனுடைய இரக்கமுள்ள குணத்தைப்பற்றி குறிப்பிடுகிறார். இவர் "வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம். நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே

நமக்கிருக்கிறார். ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்" (எபிரெயர் 4:14-16).

ஒரு ஆசாரியர் அனுதாபமுள்ளவராய் இருப்பது அபூர்வமானதோ (அ) எதிர்பாராத ஒன்றோ அல்ல. இதைக்குறித்து பவுல் எபிரெயர் 5-ஆம் அதிகாரத்தின் ஆரம்ப வசனங்களில் "மனுஷரில் தெரிந்து கொள்ளப்பட்ட எந்தப் பிரதான ஆசாரியனும் . . . தானும் பலவீனமுள்ளவனானபடியினாலே, அறியாதவர்களுக்கும் . . . இரங்கத்தக் கவனாயிருக்கிறான்" என்று எடுத்துரைக்கிறார். பெரிய வித்தியாசம் என்னவெனில், நம்முடைய பரலோகத்தின் பிரதான ஆசாரியரின் மகிமையும் மாட்சிமையுமே, இந்த உலக ஆசாரியர்களைவிட, நமக்கு மிகப்பெரிய காரியங்களைச் செய்ய வல்லமையுள்ளதாயிருக்கிறது. "தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி" (எபிரெயர் 5:9). ஆரோனுக்குப் பின்வந்த ஆசாரியர்களில் இயேசு மேலானவர் என்று பொருளல்ல, இயேசு லேவி கோத்திரத்தின் வழியாக வந்த ஆசாரியராக இல்லை, அவர் யூதா கோத்திரத்திலிருந்து வந்தவர். "நம்முடைய கர்த்தர் யூதா கோத்திரத்தில் தோன்றினார் என்பது பிரசித்தமாயிருக்கிறது; அந்தக் கோத்திரத்தைக் குறித்து மோசே ஆசாரியத்துவத்தைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே" (எபிரெயர் 7:14). மொத்தத்தில் இயேசு ஒரு வேறுபட்ட ஆசாரியத்துவத்தை உடையவராக இருந்தார். ஆரோனைப்போல, உண்மையில் இவரும் தேவனால் அழைக்கப்பட்டார் (எபிரெயர் 5:4). ஆனால், "மெல்கிசெதேக்கின் முறைமையின்படி (5:10) இது முற்றிலும் வேறுபட்ட காரியமாகும்" அதாவது இயேசு இந்தவிதமான ஆசாரியத்துவம் பெற்றவர் என்பது தெளிவாகிறது. ஏனெனில் "அப்படியே வேறொரு இடத்திலும் நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று சொல்லயிருக்கிறார்" என்று (எபிரெயர் 5:6)-ஆம் வசனம் குறிப்பாக அவரைக்குறித்துக் கூறுகிறது (சங்கீதம் 110:4).

மெல்கிசேதேக்குக்கும் மற்றும் ஆரோனுக்கும் இடையில் வேறுபட்ட காரியங்களைப்பற்றிய பல குறிப்புகளை பவுல் பெற்றிருந்தார். ஆவிக்குரிய நியாயங்களுக்கு நெருங்கிய ஆர்வத்தில் குறைவு பட்டதினால் தொடர்ந்து வரவிருக்கும் வாதங்களுக்கு, அவர்கள் ஆயத்தநிலையில் இராததினால், அவர் சொல்ல வேண்டியவைகளை இடையில் சற்று நேரம் நிறுத்தி சகோதரர்களை மேன்மையாகக் கடிந்துகொண்டு அவர்கள் தங்கள் ஆவிக்குரிய இயல்பு வலிமையை மேம்படுத்துவதற்கு அறிவுரை கூறினார். ஆறாம் அதிகாரத்தின் இறுதி வசனத்தில் அவர் நிதானமாக மெல்கிசேதேக்கைக் குறிப்பிட்டு அவருடைய பாடத்திற்குத் திரும்பினார். ஏழாம் அதிகாரத்தில் மெல்கிசேதேக்கைப்பற்றிய விளக்கவுரையின் சரியான பாதைக்கு மீண்டும் திரும்பினார். உண்மையில், எபிரெயர் 5:10-ஆம் வசனத்திலிருந்து எபிரெயர் 7:1-ஆம் வசனத்திற்கு, மைய கருத்திலிருந்து ஒரு அடிக்கூடத் (தாளம்கூட) தப்பாமல் ஒருவரால் தாண்டமுடியும்.

### அப்போஸ்தல ஆலோசனையை நம் தவறவிடாமல் இருப்போம்

அப்போஸ்தலனாகிய பவுலின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் சற்று நிற்கலாம், "மேலும், சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்துக்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேச வேண்டியதாயிற்று. நீங்கள் பெலனில்லாதவர் களானதால் உங்களுக்குப் போஜனங்கொடாமல், பாலைக் குடிக்கக் கொடுத்தேன்; இன்னமும் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருக்கிறபடியால், இப்பொழுதும் உங்களுக்குப் பெலனில்லை. பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்திற்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா?" (எபிரெயர் 5:11-14; 1 கொரிந்தியர் 3:1, 2 ஒப்பிட்டுப்பார்க்கவும்).

"மந்தமுள்ள" என்ற வார்த்தை நோத்ரோஸ் (nothros) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது. அதே வார்த்தை அதற்குப் பின்வந்த எபிரெயர் 6:12-ஆம் வசனத்தில் "அசதி" என்று கூறப்படுகிறது. இங்கு திறனைப்பற்றி அல்ல, செயல்படுத்து

வதைப்பற்றி முக்கியத்துவப்படுத்துகிறது: விசுவாசத்தின் ஆழமான காரியங்களைக்குறித்து சகோதரர்கள் சுறுசுறுப்போடு போராடவில்லை. அதுபோல ஒரு பிரச்சனை இன்றைய கிறிஸ்தவ உலகத்தின்மேலும் அமர்ந்திருக்கிறது. சகோதரர் களும் துன்ப நெருக்கடியில் இருக்கிறார்கள். சில மூத்த (அனுபவம் வாய்ந்த) சகோதரர்கள் வேதத்தின் பரிச்சயத்தில் குறைந்து சாதித்தவராய்க் காணப்படலாம், மட்டுமல்லாது முனைப்பார்வமுள்ள இன்றைய சகோதரர்களால் உந்தப்பட்டும் இருக்கலாம்.

இங்கு நம்முடைய புரிந்துகொள்ளுதலை மேம்படுத்துவதற்கு இரண்டு மூலக்கூறுகளை வித்தியாசப்படுத்தலாம். ஒன்று, சாதாரணமாக வேதாகமப் பரிச்சயமாகும். இவ்வகையை வேதாகமத்தையும், அவற்றின் பல்வேறு புத்தகத்தையும், அவற்றின் நோக்கம் மற்றும் மூலக்கருத்து என்ன என்பதையும், எவ்வாறு ஒன்று மற்றொன்றோடு தொடர்புடையது என்பதையும், அறிந்துகொள்ள, போதிய அளவில் படிப்பதினால் எட்டப்படுகிறது. பரிச்சியத்திற்கும்மேலாக, வேதாகம வாதங்கள் மற்றும் பகுத்தறிதலைச் சரியாகக் கவனிக்க, முயற்சிகள் என்பது இருத்தல் வேண்டும். இவற்றைக் கூறிய மற்றும் ஆர்வமிக்க சில மனதும்கூட, பரலோக நீதிமன்றத்திலிருந்துவரும் பொக்கிஷமான வார்த்தைகளின் மீது ஆழமாக பயிற்றுவிக்க தவறிவிடுகின்றன.

இப்படியாக இது நம்மிடம் இருந்தால், அதன் காரணத்தை மதிப்பிட்டு அதை மேற்கொள்வோம். நம்மை அழுத்தக்கூடிய பொறுப்புகளினால், நம்முடைய நேரம் குறைவுபடுகிறதா? "தண்டில் சேவகம் பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக்கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக் கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளமாட்டான்" (2 தீமோத்தேயு 2:4). பவுல் தீமோத்தேயுவுக்கு கூறின ஆலோசனையை நினைவில் வைத்து, நேரத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்குக் கூடுமான இடங்களில் நம்முடைய பொறுப்புகளைச் சீர்நிலைப்படுத்துவோம். இதற்கான ஆர்வத்தில் குறைவுப்பட்டிருக்கிறோமா? இது "ஆண்டவர்மேலுள்ள வைராக்கியத்தின் குறைவு மற்றும் உலகத்தின் ஆவியின், பின்விளைவுகளாக இருந்தால்," நாம் மீண்டும் நம்முடைய கவனத்தைப் பூமிக்குரிய பலனிலிருந்து ஆவிக்குரிய பலன்களின்மேல் திருப்ப வேண்டும். ஒருவேளை பூமிக்குரிய பொழுதுபோக்குகள் நம்முடைய ஆவிக்குரிய நாட்டங்களைச் சோர்வடையச் செய்திருக்கலாம்.

இப்படிப்பட்ட ஒரு குறைப்பாடு, நம்முடைய ஆவிக்குரிய மதிக்கூர்மையை மட்டுமல்ல, நம்முடைய கூட்டாளிகளையும் பாதிக்கும், நாம் ஒரு வகுப்புக்கு அல்லது மாநாட்டுக்குச் செல்லும்போது, சகோதரர்களோடு பகிர்ந்துகொள்வதற்கு ஓரிரு குறிப்புகள் அல்லது நம்முடைய ஆவிக்குரிய வீரியங்களை மையப்படுத்துவதற்கான கேள்விகள், போன்றவற்றை ஆயத்தப்படுத்திக்கொண்டுப் போகலாம். ஒருவேளை நம்முடைய சம்பாஷணைகள் பூமிக்குரிய காரியங்களினால் நிரம்பியிருந்தால், ஆவிக்குரிய வளர்ச்சி இருக்காது. ஆவிக்குரிய உணவின்மேல் நாட்டம் அல்லது ஆர்வமில்லாதிருந்தால், நாம் ஆவிக்குரிய நோயாளிகள்.

யுகத்தைக் கடந்த சபையின் ஒவ்வொரு வளர்ச்சியும், ஆசாரியர்களினால் ஊதப்பட்ட வெள்ளி பூரிகைகளினால் சத்தியம் அறிவிக்கப்பட்டது (எண்ணாகமம் 10:2, 8; வெளிப்படுத்தல் 8:2). கேட்பதில் மந்தமானவர்கள் அல்லது விரைவு செய்திகளில் ஆர்வமுள்ளவர்கள், இந்தப் பலன்களை வழுவ விடுவார்கள். ஏழாம் எக்காளத்தின் சத்தத்தைக் கேட்ட நாம், நம்முடைய ஆர்வத்தை மங்கச் செய்வோமா? மற்றும் நம்முடைய ஆர்வத்தை இழப்போமா? சத்தியம் பழமையாகப் போகுமா? அதின்மேலுள்ள உணர்ச்சி வேகத்தை இழப்போமா? அல்லது நமக்கு வைக்கப்பட்டிருக்கும் இரத்தினமான சத்தியங்களைப் பின்பற்றுவதற்கு ஆர்வமுள்ளவர்களாகவும், ஊக்கமுள்ளவர்களாகவும் மற்றும் ஆற்றலுடையவர்களாகவும் இருக்கிறோமா?

**மெல்கிசெதேக்கைப்பற்றிய ஆய்வு மீண்டும் தொடருகிறது**

அதிகாரம் 7-இல், பவுல் மீண்டும் பாடத்திற்குத் திரும்பியபோது, மெல்கிசேதேக்கு யார் என்பதையும், அவர் இயேசுவுக்கு எவ்வாறு பொருத்தமான விளக்கப்படமாக இருக்கிறார் என்பதையும் எபிரெயர்களுக்கு நினைப்பூட்டினார்.

அவருடைய நாமம் மற்றும் அவருடைய பொறுப்புகளும் (வேலைகள்) இயேசுவுக்கு அடையாளமாக இருந்தது (எபிரெயர் 7:2), லேவியர்களுக்கு தேவைப்பட்டது போல, மெல்கிசேதேக்கிற்கு வம்சவரலாற்றைக் கண்டுபிடிப்பதற்கு அவசியமில்லாததிருந்தது. ஆரோனுடைய முடிவைப்பற்றி பதிவுகள் காணப்படுகின்றதுபோல, மெல்கிசேதேக்கின் வாழ்க்கையின் முடிவைப்பற்றி பதிவுகள் இல்லை. தொடர்ந்து செயல்படும் இயேசுவின் ஜீவன் மற்றும் அவருடைய ஆசாரியத்துவத்தின் உருவப்படமாக ஆரோனின் ஆசாரியத்துவம் இருந்தது. மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம் ஆரோனின் ஆசாரியத்துவத்தைக் காட்டிலும் மேலானது என்பதற்கு பவுல் ஐந்து ஆதாரங்களைக் கொடுக்கிறார்.

(1) தங்களுடைய நாட்டாரிடமிருந்து தசமபாகம் வாங்கும் லேவியர்களான ஆசாரியர்கள், தங்களுடைய தந்தையாம் ஆபிரகாம் இருக்கும்போதே மெல்கிசேதேக்குக்கு தசமபாகம் செலுத்தினார். இது மெல்கிசேதேக்கை ஒரு உயர்வான நிலையில் வைக்கிறது. மேலும் ஆபிரகாம் மெல்கிசேதேக்கினால் ஆசீர்வதிக்கப்பட்டார். மேலும் "சிறியவன் பெரியவனாலே ஆசீர்வதிக்கப்படுவான்" (வசனங்கள் 4-10).

(2) லேவியரின் ஆசாரியத்துவத்தினால் பரிபூரணமடையலாம் என்றால், அதற்குப்பின் எழும்பக்கூடிய ஆசாரியத்துவத்தைப்பற்றி வேதநூல் (சங்கீதம் 110:4) ஏன் பேச வேண்டும்? ஏதோ மேன்மையானது வரப் போகிறதினால், ஆரோனின் ஆசாரியத்துவம் தொடர்பற்று போனதை இது சுட்டிக்காட்டுகிறது (வசனங்கள் 11-19).

(3) தாழ்ந்த நிலையிலுள்ள ஆரோனின் ஆசாரியத்துவத்தைப்போலிராமல், சங்கீதம் 110:4-ஆம் வசனத்தில் வாக்குத்தத்தமான மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம், ஓர் ஆணையோடு முத்திரிக்கப் பட்டது. "ஆனதால், இயேசுவானவர் ஆணையின்படியே ஆசாரியராக் கப்பட்டது எவ்வளவு விசேஷித்த காரியமோ, அவ்வளவு விசேஷித்த உடன்படிக்கைக்குப் பிணையாளியானார்" (வசனங்கள் 20-22).

(4) பழைய கடமைகள் பல பிரதான ஆசாரியர்களினால் பணியாற்றப்பட்டது. "அன்றியும், அவர்கள் மரணத்தினிமித்தம் நிலைத்திருக்கக் கூடாதவர்களானபடியால், ஆசாரியராக்க ப்படுகிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள்" ஆனால் இயேசுவோ, "என்றென்றைக்கும் நிலைத்திருக்கிற படியினாலே, மாறிப்போகாத ஆசாரியத்துவ முள்ளவராயிருக்கிறார்" (வசனங்கள் 23-25).

(5) நம்முடைய பிரதான ஆசாரியர், "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாயிருந்தார். நியாயப்பிரமாணமானது பெலவீனமுள்ள மனுஷர்களைப் பிரதான ஆசாரியராக ஏற்படுத்துகிறது. நியாயப்பிரமாணத்திற்குப் பின்பு உண்டான ஆணையோடே விளங்கிய வசனமோ என்றென்றைக்கும் பூரணரான குமாரனை ஏற்படுத்துகிறது" (வசனங்கள் 26-28).

இவ்வனைத்து குறிப்புகளும், மகா பெரிய ஆசாரியத்திற்கு நிழலும், மாதிரிகளுமாகத் திகழும். பழைய ஆசாரியர்களுக்குமேலாக மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம் உள்ளது. "இவர்கள் செய்யும் ஆராதனை பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது. இவரோ விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார்" (எபிரெயர் 8:5, 6, 13).

# ஒருவரையொருவர் தேற்றுங்கள்

""கர்த்தர்தாமே வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்" (1 தெசலோனிக்கேயர் 4:16).

David Rice

சில நேரங்களில், நாம் நுணுக்கமாக கருதும் வேதநூல் பகுதிகள், உண்மையில் ஆறுதலளிக்கும் அறிவுரைகளாக ஏற்ற சூழ்நிலைக்குள் பதிக்கப்பட்டுள்ளது. 1 தெசலோனிக்கேயர் 4:13-18-ஆம் வசனங்களில் இவ்விஷயத்தைக் காணலாம். அண்மையில் தெசலோனிக்கேயாவில் அறிமுகமான சில சகோதரர்கள் மரண நித்திரை அடைந்தார்கள் என்று பவுல் கேள்விப்பட்டார். இந்நாளில் நடப்பதுபோல இயல்பாகவே, இது சகோதரர்களுக்கு துக்கத்தை ஏற்படுத்தியது. மரித்துப்போனவர்கள் வாலிபராக இருந்ததால் மேலும் துக்கத்தை ஏற்படுத்தியது.

அண்மையில் பவுலின் இரண்டாம் ஊழிய பயணத்தின்போதுதான், தெசலோனிக்கேயாவில் சபை ஸ்தாபிக்கப்பட்டது. அந்த எல்லையைவிட்டு தென்புறத்திலுள்ள அத்தேன பட்டணத்திற்குச் சென்றார். அதற்குப்பின் கொரிந்து பட்டணத்திற்குச் சென்று 18 மாதங்கள் அங்கு தங்கியிருந்தார் (அப்போஸ்தலர் 18:11). இந்த நிருபம் அத்தேனே பட்டணத்திலிருந்து எழுதப்பட்டது என்று 1 தெசலோனிக்கியருக்கு எழுதப்பட்ட பொதுவான நிருபத்தின் முடிவில் காணப்படுகிறது. ஆயினும் சந்தேகத்திற்கிடமின்றி இந்த நிருபம் கொரிந்து பட்டணத்தில் எழுதப்பட்டது என்று ஜேமிசன் (Jamieson) பாயுசெட் (Fausset) மற்றும் பிரௌன்ஸ் கமெண்டரி (Brown’s commentary) விளக்கவுரைகள் கூறுகிறது.ஸ்டாராங்ஸ் என்சைக்கிலோபீடியாவும் (Strong’s Encyclopedia) இக்கருத்தை ஏற்றுக்கொள்கிறது. சபை ஸ்தாபிக்கப்பட்டு அதிகபட்சமாக இரண்டு வருடங்களுக்குப்பின் இந்த நிருபம் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று இது குறிப்பிடுகிறது.

அந்தக் குறைவான காலத்திற்குள் தெசலோனிக்கேயாவில் புதிதாக ஞானஸ்நானம் பெற்ற சில சகோதரர்கள் தங்களுடைய ஓட்டத்தை முடித்துவிட்டார்கள். ஆகவே, அங்குள்ள சகோதரர்களை, ஆறுதல் படுத்த வேண்டுமென்று பவுல் விரும்பியதால், கிறிஸ்துவின் திரும்புதலின்போது மரித்துப்போன சகோதரர்களுக்காக காத்திருக்கும் பரலோக பரிசுகளைப்பற்றி ஞாபகப்படுத்தினார். "ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்" (1 தெசலோனிக்கேயர் 4:18).

ஆகவே கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப்பற்றியும், அதற்குப்பின் கிறிஸ்துவின் பரிசுத்தவான்கள் அவரோடுகூடி சேருவதைப்பற்றியும் பவுல் குறிப்பிட்டார். ஐந்தாம் அதிகாரத்தில் சகோதரர்கள் வாழ வேண்டுமென்ற அறிவுரைகளை அவர் சேர்த்துக்கூறினார். "ஆகையால், மற்றவர்கள் தூங்குகிறது போல நாம் தூங்காமல், விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக் கடவோம்" (1 தெசலோனிக்கேயர் 5:6). இரண்டாம் நிருபத்தில், முதல் அதிகாரத்தில் பவுல் மீண்டும் அதே பாடத்திற்குத் திரும்பினார். "அவர் வரும்போது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாக்கி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்" (2 தெசலோனிக்கேயர் 1:10). இரண்டாம் அதிகாரத்தில் நாம் அறிந்திருக்கிறபடி போப் அமைப்பு ஆகிய "பாவமனுஷன்" வளர்ச்சியடைந்து வெளிப்பட்டபின் கிறிஸ்து திரும்பிவருவார் என்பதை விளக்கமளிப்பதற்கு, தானியேல் 7 மற்றும் தானியேல் 11-ஆம் அதிகாரங்களிலுள்ள தீர்க்கதரிசனங்களை அவர் மேற்கோள் காட்டினார் (2 தெசலோனிக்கேயர் 2:3).

### 1 தெசலோனிக்கேயர் (4:13-18)

கிறிஸ்துவின் இரண்டாம் பிரசன்னத்தின்போது, ஆண்டவரின் அனைத்து ஜனங்களும் உடனடியாக ஆவிக்குரிய வெகுமதிகளில் பங்கடைவர்கள் என்ற எதிர்பார்ப்புதான், சில கிறிஸ்தவரின் மனதில் கர்த்தரின் இரண்டாம்

பிரசன்னத்தின் சத்தியத்தை மறைக்கும், பல கருத்துக்களில் ஒன்றாய் உள்ளது. இதுபோன்ற ஒரு கருத்திற்கு தேவைப்படுவது, ஆண்டவரின் வருகையைத் தொடர்ந்து, அவரின் ஜனங்கள் ஒருவரும் மாம்சத்தில் நிலைத்திருக்க மாட்டார்கள், ஆதலால், நாம் இன்னும் இங்கு உள்ளதால், கிறிஸ்து இன்றும் பிரசன்னமாகவில்லை என்று அனுமானிப்பதேயாகும். இவைகள் கர்த்தரின் இரண்டாம் வருகையைக் குறித்ததான வேதாகம போதனைகளுக்கு எதிரானதாக இருக்கின்றது.

(1) இயேசுவும் அவருடைய சீஷர்களும் ஒவ்வொரு பட்டணங்களாகச் சென்று, யூத யுகத்தின் கோதுமை மணிகளைச் சேகரித்தார்கள். இவ்வாறு யூத யுகத்தின் அறுவடை பல வருடங்களான வேலையாக இருந்தது. இந்த வேலை இயேசுவுக்குப்பின் எருசலேம் அழிந்து (எரிந்து) போகும்வரையில் தொடர்ந்தது. சுவிசேஷ யுகத்தின்அறுவடை இதைக்காட்டிலும் பெரிதான நோக்கமுடையது. ஆகவே நியாயமாக இந்த யுகத்தின் பலன்களைச் சேகரிப்பதற்கான வேலை, இன்னும் பல வருடங்களை உள்ளடக்கியுள்ளது. ஆயினும் சுவிசேஷ யுகத்தை முடிக்கும் அறுவடை, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை முந்திக்கொள்வதில்லை (வெளிப்படுத்தல் 14:14).

(2) லூக்கா 12:36, 37-இல் கிறிஸ்துவின் திரும்புதல், சத்திய விருந்துக்கு முன் வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. இது சபையின் ஏழு நிலைகளின் ஏழாம் பகுதியில் நிறைவேறியதாக வெளிப்படுத்தல் 3:20-ஆம் வசனம் காட்டுகிறது. இப்படியாக, சுவிசேஷ யுகத்தின் ஒரு முழு பகுதி, கிறிஸ்துவின் திரும்புதலுக்குப் பின் தொடருகிறது.

(3) "நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின் பிரசன்னம்" மற்றும் "கிறிஸ்துவின் நாள்" இன்னும் வரவில்லை என்று அவருடைய நாட்களில் வாழ்ந்த சகோதரர்களுக்கு 2 தெசலோனிக்கேயர் 2-ஆம் அதிகாரத்தில் பவுல் விளக்கமளித்தார். வருங்காலத்தில், சிறிது காலம் சென்றபின்பு, தானியேல் 7 மற்றும் 11-ஆம் அதிகாரத்தில் உறுதியிட்ட இரண்டாம் வருகைக்கு முன்பதாக, ஒரு விசுவாச துரோகம் உருவாகி, முதிர்ந்து வெளிப்படுமென்று அவர்களிடம் பவுல் விளக்குகிறார். "கர்த்தர் இப்போது வந்திருந்தால், நாம் இங்கே இருக்கமாட்டோம்" என்று கூறும்படியாக விஷயம் அவ்வளவு சுலபமாக இருந்தால் மிகச் சிக்கலான தீர்க்கதரிசனங்கள் அவருக்குத் தேவைப்பட்டிருக்காது.

(4) வெளிப்படுத்தலில் ஆறாம் வாதையின் முடிவை, தொடர்ந்துவரும் இரண்டாம் பிரசன்னத்தில், சில பரிசுத்தவான்கள் மாம்சத்தில் இருப்பார்கள். இந்த உலகத்தில் பரிசுத்தவான்கள் தங்களுடைய வஸ்திரத்தைக் கறைபடாதபடிக்குக் காத்துக்கொள்ள வேண்டுமென்ற அறிவுரையில் இது காட்டப்படுகிறது. பரிசுத்தவான்கள் மாம்சத்தில் இராவிட்டால் இந்த வாக்கியத்திற்கு அர்த்தமில்லாமல் போய்விடும் (வெளிப்படுத்தல் 16:15).

(5) யாத்திராகமத்தில் கடைசி வாதையின்போது, பரலோகத்தில் பேர் எழுதியிருக்கும் சபையில் முதற்பேரானவர்களை (எபிரெயர் 12:23) அடையாளப்படுத்தும் தலைச்சன்கள், இதுவரையில் இரதத்தின் கீழ், பஸ்கா ஆட்டைப்புசித்துக் கொண்டிருப்பவர்களாக அடையாளப்படுத்தப் படுகிறார்கள். இப்படியாக, இறுதி வாதையின் துவக்கத்தில், சபை இந்நாள்வரையில் இந்தப் பூமியில் இருக்கிறது.

இந்தக் குறிப்புகள் எப்படியிருந்தாலும், 1 தெசலோனிக்கேயாவிலும் குழப்பமடையச் செய்யும் பவுலின் வாக்கியங்களை, விவரமாகக் காண வேண்டும். தொடர்ந்து 1 தெசலோனிக்கேயர் 4:13-18-ஆம் வசனங்களை ஒன்றின் பின் ஒன்றாக நாம் ஆராயலாம்.

வசனம் 13 - "அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப்போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை." அண்மையில் மரித்துப்போன சகோதரர்களைப் பொறுத்தவரையில், நம்பிக்கை மற்றும் ஆறுதலளிக்க வேண்டுமென்பதே பவுலின் முக்கிய நோக்கமாக இருந்தது. பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதலைப்பற்றி பவுல் கூறியது அர்த்தமுள்ளதாக இருப்பினும், இது தீர்க்கதரிசனத்தைக்குறித்தப் பாடமாக வெளிப்படுத்துவது அவரின் நோக்கமல்ல.

வசனம் 14 - "இயேசுவானவர் மரித்த பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர் களைப்போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை." "நித்திரை அடைந்து" என்று சரியாகச் சொல்லலாம். இருப்பினும், இவ்வார்த்தை துல்லியமானதல்ல. ஏனெனில், இது வினைச்சொல் வடிவத்தில் உள்ளது. (அவர்களுக்கு நடந்தது ஏதோ ஒன்று) "இறுதியான இளைப்பாறுதல்" என்று ultra-literal அகராதி மொழிபெயர்ப்பு கூறுகிறது. 13-ஆம் வசனத்தில், இதே கருத்தை பவுல் மனதில் வைத்திருந்தார். இந்த வேத பகுதி கிறிஸ்துவின் மரண நித்திரையில் "இளைப்பாறிக்கொண்டிருப்பவர் களைப்" பற்றிய நம்முடைய நம்பிக்கையின் ஆறுதலை அறிமுகப்படுத்துகிறது.

இந்த வேத பகுதியில் "அவரோடு" என்ற ஒரு முக்கியமான சிறிய வார்த்தையைக் காணலாம். "இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக்கொண்டுவருவார்" என்று பவுல் எதைப் பொருள்படுத்துகிறார்? இயேசு வரும்போது, தேவன் அவர்களை இயேசுவோடு கொண்டுவருவார், என்று பொருளல்ல. மாறாக, இயேசுவின் வருகைக்குப்பின் பரிசுத்தவான்கள் எழுப்பப்படுவார்கள். "நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணின சமாதானத்தின் தேவன்" என்று இயேசுவைப்பற்றி எபிரெயர் 13:20-ஆம் வசனத்தில் சொல்லப்பட்டதுபோல, "கொண்டுவருவார்" என்பதற்கு மரணத்திலிருந்து மீண்டும் கொண்டுவருவார் என்று பொருள்.

"அவரோடு" (உடன்) என்ற வார்த்தை "சன்" என்ற கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பாகும். இங்கு நாம் மரணத்திலிருந்து இயேசுவோடு உயிர்த்தெழுப்பப்படுவதைக் குறிப்பிடுகிறது. இது இயேசு உயிர்த்தெழுந்ததுபோல், அதே நேரத்தில் நடக்கக்கூடிய சம்பவமாக இராதபோதிலும், உண்மையில், இது பல நூற்றாண்டுகள் இடைவெளி உள்ளது - இது பகிர்ந்துக்கொண்ட அனுபவம்.

பகிர்ந்துக்கொள்ளக்கூடிய அனுபவங்கள் அடிக்கடி நிகழ்ந்தாலும், அதே நேரத்தில் நீண்ட காலத்திற்கு இடைவெளியுள்ள சம்பவங்களைக் குறிப்பிடுவதற்கு "அவரோடு (உடன்)" என்ற வார்த்தையை அரிதாகப் பயன்படுத்துகிறோம். ஆனால் சன் (sun) என்ற கிரேக்க வார்த்தை, இவ்வகையான பயன்பாட்டிற்கு சில குறிப்பிட்ட எடுத்துகாட்டுக்களைப் பெற்றுள்ளோம்.

(1) "கர்த்தராகிய இயேசுவை எழுப்பினவர் எங்களையும் இயேசுவைக்கொண்டு எழுப்பி, உங்களுடனேகூடத் தமக்குமுன்பாக நிறுத்துவாரென்று அறிந்திருக்கிறோம்" (2 கொரிந்தியர் 4:14). இது 1 தெசலோனிக்கேயர் 4:14-ஆம் வசனத்திற்கு நேர் இசைவாக உள்ளது.

(2) "ஞானஸ்நானத்திலே அவரோடுகூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின்மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள். உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனம் இல்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடேகூட உயிர்ப்பித்து, அக்கிரமங்கள் எல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்தார்" (கொலோசெயர் 2:12, 13). கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நீண்ட காலத்திற்கு முன் நிகழ்ந்திருந்தாலும் அவருக்குள்ளாக ஒரு புதிய ஜீவனுக்குள் நாம் எழுந்திருப்பது "அவரோடுகூட" நடைபெறுவதாகும்.

(3) "அந்தப்படி விசுவாசமார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்" (கலாத்தியர் 3:9). இந்த எடுத்துக்காட்டை சுட்டிக்காட்டி "அவரோடு, (உடன்)" என்ற வார்த்தை 1 தெசலோனிக்கேயர் 4:14-ஆம் வசனத்திலுள்ள வார்த்தையின் உள்நோக்கத்தை அருமையாக விவரிக்கக் கூடியதாக இருக்கிறது என்று Moulton's Analytical greek Lexicon Revised, 1978 பிரதி கூறுகிறது.

பகிர்ந்துக்கொள்ளும் அனுபவத்திற்காக "சன்" என்ற வார்த்தையின் பயன்பாடு, நீண்ட காலமாகப் பிரிந்திருந்தாலும், நாம் 17-ஆம் வசனத்திற்கு வரும்போது மீண்டும் முக்கியத்துவத்தைப் பெறுகிறது.

வசனம் 15 - "கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை." "மரித்தவர்கள்" என்ற அதே வார்த்தை [14-ஆம் வசனத்திலும், அதே ஆட்களைக் குறிப்பிடுகிறது]

கிறிஸ்துவின் பிரசன்னத்திற்குள்ளும் சில பரிசுத்தவான்கள் ஜீவித்துக்கொண்டிருப்பார்கள் என்று பவுல் கூறுகிறார். இவர்களும், மற்ற பரிசுத்தவான்களைப்போல தங்களுடைய ஓட்டத்தை நிறைவு செய்து, மரணம்வரையில் விசுவாசத்தைக் காத்துக்கொள்ள வேண்டும் (வெளிப்படுத்தல் 2:10). [புதிய RVIC பைபிளில், "Revised Version Improved and Corrected" (மேம்படுத்தப்பட்ட மற்றும் சரிசெய்யப்பட்ட திருத்தப்பட்ட பதிப்பு) 1 கொரிந்தியர் 15:51, 52-ஐ புரிந்துகொள்ள, நல்ல கையெழுத்துப் பிரதியின் ஆதாரத்தை மேற்கோள் காட்டுகிறது. "நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை . . . நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம் . . . மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம்." 'நித்திரை' என்னும் வார்த்தைக்குச் சரியான வார்த்தை "நித்திரை அடைவது" (இன்னும் சொல்லப்போனால், செயப்பாட்டுவினையாக "நித்திரை அடைவது" என்னும் வினைச்சொல் இருப்பதால் என்று குறிப்பிடலாம்) நாம் மரண உறக்கத்தில் நீடித்திருப்போம் என்று அதற்கு அர்த்தம் இல்லை. ஆண்டவரின் மக்கள் மரித்துப்போவார்கள் என்பதே இதற்கு எளிமையான அர்த்தமாகும். யுகத்தின் முடிவில் இருக்கும் பரிசுத்தவான்களின் பரிசைப்பற்றி விளக்கும் தருவாயில் இவ்வாறு பவுல் உறுதிப்படக்கூறுவது குறிப்பிடத்தக்கது] ஆனால் முன்னதாவே இயேசுவுக்குள் நித்திரை அடைந்தவர்கள் இவர்களுக்காகக் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. இப்படியாக நீண்ட காலத்திற்கு முன் நித்திரை அடைந்தவர்கள் உயிர்த்தெழுதலில் முதன்மையாக எழும்புவார்கள். நாம் அதாவது பிந்திவருபவர்கள், நம்முடைய பூமிக்குரிய வாழ்க்கை முடிவடையும்போது, அவர்களைப் பின் தொடருவோம்.

**பவுல் எவ்வாறு அறிந்துகொண்டார்?**

"ஆண்டவரின் வார்த்தையின்" அதிகாரத்தினால் இதைப் பெற்றுக்கொண்டதாக பவுல் குறிப்பிடுகிறார். ஒருவேளை, சுவிசேஷங்களில் பதிவு செய்யப்பட்ட இயேசுவின் வார்த்தைகளிலிருந்து எடுத்திருக்கலாம். "நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" (யோவான் 14:3) என்று இயேசு கூறினார். ஒருவர் நித்திரை அடைந்திருந்தால் மட்டுமே, கிறிஸ்துவின் திரும்புதலின்போது அவர் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்பதை பவுல் இதிலிருந்து புரிந்துகொண்டார்.

ஆயினும், கிறிஸ்து திரும்பிவரும்போது, வாழ்ந்துகொண்டிருக்கும் பரிசுத்தவான்கள், மாம்சத்தில் இருக்கும்போதே விசேஷித்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டிருப்பார்கள் என்று பவுல், லூக்கா 12:36, 37-ஆம் வசனங்கள் வழியாக கண்டிருக்க வேண்டும். இப்படியாக இவர்கள் யுகத்தின் முடிவு காலத்திற்குள் காலங்கழித்துக்கொண்டிருப்பார்கள். கர்த்தரின் இரண்டாம் பிரசன்னதைத் தொடர்ந்து, பதரையும் கோதுமையையும் பிரிக்கும கணிசமான வேலை நடக்குமளவும், சுவிசேஷ வேலையானது கர்த்தரின் வருகைக்குப் பின்னும் ஒரு குறிப்பிடப்படாத காலம்வரை நீடிக்கும் எனவும், பவுல் மத்தேயு 13-இல் கூறப்பட்ட கோதுமை - பதர் உவமையிலிருந்து, நிதானித்திருக்க வேண்டும்.

வசனம் 16 - "ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதானதூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்." இங்கு பவுல், 15-ஆம் வசனத்தின் சாரத்தை (சுருக்கம்) மீண்டும் கூறி, பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதலில் ஒரு வரிசை இருப்பதாக உறுதியளிக்கிறார். அந்த வரிசையில் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். இவர்கள் ஜீவனுள்ள அங்கத்தினருக்கு முன் மகிமையில் பிரவேசிப்பார்கள்.

சத்தம், ஆரவாரம் மற்றும் எக்காளம் என்ற அடையாளங்களை பவுல் மற்ற வசனங்களிலிருந்து சேகரித்திருக்க வேண்டும். ஆண்டவருடைய திரும்புதலின்போது, ஒரு எக்காளம் மற்றும் ஒரு பெரிய சத்தத்தைப் பற்றி மத்தேயு 24:31-ஆம் வசனம் குறிப்பிடுகிறது. "சத்தம்" என்பதற்கான கிரேக்க வார்த்தை கெலுசுமா (keleusma), புதிய ஏற்பாட்டில் மட்டுமே காணப்படுகிறது. ஒருவேளை, பழைய ஏற்பாட்டில், அதாவது யோசுவா 6-ஆம் அதிகாரத்தில், எரிகோவை யோசுவா கைப்பற்றிய சம்பவத்தில் இருந்து அல்லது எண்ணாகமம் 23:21 அல்லது மற்ற எடுத்துகாட்டுகளிலிருந்து பவுல் இந்த வார்த்தைகளை எடுத்திருக்கலாம்.

வசனம் 17 - "பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்."

"பின்பு" என்ற வார்த்தை எப்பீட்டா (epeita) என்ற கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பாகும். இதற்கு "பிற்பாடு அல்லது பின்னர்" என்று பொருள். "பின்பு" என்ற வார்த்தைக்கு விரிவான பொருள் இருப்பதினால் இவ்வார்த்தை, இந்த வசனத்தில் தெளிவான விளக்கத்தைக் கொடுப்பதில்லை. ஆனால் வேறுபட்ட தெளிவான கிரேக்க வார்த்தைகள் இதற்குக் காணப்படுகிறது. ஆங்கிலத்தில் "then" என்ற வார்த்தை "அந்த நேரம்," "ஆகையால்," அல்லது "பின்னர்" என்று பொருள் கூறினாலும், இவைகளுக்கான வெவ்வேறு கிரேக்க வார்த்தைகளாகிய tote, ara, epeita தெளிவாகக் காணப்படுகிறது (மத்தேயு 24:30; 24:45 மற்றும் கலாத்தியர் 1:21)

"உயிரோடிருக்கும் நாமும்" என்று பவுல் குறிப்பிடுகையில், 15-ஆம் வசனத்தில் குறிப்பிட்ட அதே நாட்களுக்கு அதே கிரேக்க வார்த்தைகளைப் பயன்படுத்தினார். இவர்கள் "மற்றவர்களோடு" எடுத்துக் கொள்ளப்படுவார்கள். இங்கு, 14-ஆம் வசனத்தில், "அவரோடுகூடக் கொண்டுவருவார்" என்ற வார்த்தையைக் கவனத்தில் வைப்பது மிக அவசியம். இங்கு மரணத்திலிருந்து பரிசுத்தவான்கள் இயேசுவோடுகூட திரும்பி எழுப்புவார். அதாவது அதே அனுபவம், ஆனால் வேறொரு நேரத்தில் நித்திரை அடைந்த பரிசுத்தவான்களைப்போல கிறிஸ்துவின் பிரசன்னத்தின் காலத்திலிருக்கும் மாம்சத்திலுள்ள பரிசுத்தவான்களும் அதே அனுபவத்தைப் பெறுவார்கள். ஆனால் ஒரே நேரத்திலல்ல. இதற்கு ஒருவரிசை உண்டு. "பின்பு," உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் மரணத்தில், நித்திரையடைந்த பின்பு ஒவ்வொருவராக அல்லது ஒருவருக்குப் பின் ஒருவராக, மற்றவர்களோடு இணைவார்கள்.


பரிசுத்தவான்கள் கர்த்தரோடுகூட மேகத்தின்மேல் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். இது சொல்லர்த்தமான மேகமல்ல, ஏனெனில் பரிசுத்தவான்கள் ஆவிக்குரிய ஜீவிகளாக இருப்பதினால், மேக மூட்டமுள்ள இடத்தில் இவர்கள் கட்டுப்பட்டிருக்கமாட்டார்கள். தானியேல் 7:13-ஆம் வசனத்தில், மேகங்கள் அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் "மனுஷகுமாரனுடைய . . . ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்." "வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரிகமும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்; அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம்; சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து, அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும் என்றான்" (தானியேல் 7:27).

பரிசுத்தவான்கள் தங்களுடைய உயிர்த்தெழுதலின்போது, உண்மையில் ஆண்டவரை சந்திப்பார்கள். ஆனால் ஜேம்ஸ் மொழிப்பெயர்ப்பில் உண்மையான குறிப்பு மறைக்கப்பட்டுவிட்டது. அதாவது நாம் அங்கு கிறிஸ்துவைச் சந்தித்து, நமக்கு முன் சென்ற பரிசுத்தவான்களோடு இணைந்திருப்போம்.

வசனம் 18 - "இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்" தங்களை நேசித்தவர்களின் இழப்புக்கு ஆளானவர்களுக்கு ஆறுதல் அளிக்கும்படி இந்த வசனத்தின் நோக்கம் அமைந்துள்ளது. மேலும் பவுல் தன்னுடைய முடிவுரையில், இதன் சுருக்கத்திற்கு மீண்டும் திரும்புகிறார்.

**தாவீதின் கொள்ளுப்பாட்டி**

# ரூத் புத்தகத்திலுள்ள கருத்துக்கள்



**Loan Hosu**

"நான் உம்மைப்பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப் போவதைக்குறித்து, என்னோடே பேச வேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன் " (ரூத் 1:16).

ரூத் புத்தகம், பெத்லெகேமின் துன்பியில் நாடகத்தின் மூன்றாம் தொகுதியும், ரூத்தைப்பற்றிய ஒன்றுப்பட்ட தொடர் உரை என்றும் சொல்லப்படுகிறது. மேலும் நியாயாதிபதிகளின் புத்தகத்தில் கடைசி இரண்டு நிகழ்ச்சி விரிவுரைகள் காணப்படுகிறது (17-18 மற்றும் 19-21). பெத்லெகேம், இராஜாவாகிய தாவீதின் பிறப்பிடமாக இருந்தது. பல நூற்றாண்டுகளுக்குப்பின் இராஜாவாகிய இயேசுவும் அதே இடத்தில் பிறந்தார் (மீகா 5:2).

மோவாபியர்களின் இனிமையான மற்றும் விசுவாச பண்புகளை, ரூத் புத்தகம் வெளிப்படுத்துகிறது. தேவனுடைய வாக்குத்தத்தங்களை நோக்கி, புறஜாதிகளிலிருந்து இழுக்கப்பட்ட நம் அநேகருக்கு இது ஊக்கமளிக்கக்கூடியதாக உள்ளது. ரூத் தேவனுக்குப் பிரியமாக நடந்துகொண்டதினால், தேவனால் தேர்வு செய்யப்பட்ட இராஜாவின் குடும்பத்தில் ஒருவராக இருக்கக்கூடிய பரிசைப் பெற்றாள். இவ்வழியில், தேவனால் தேர்வு செய்யப்பட்ட மேசியாவின் குடும்பத்தில் அங்கமாக இருக்க விரும்பக்கூடியவர்களாகிய நமக்கு ரூத்தின் புத்தகம் சம்பந்தப்பட்டதாக இருக்கிறது.

எடுத்துக்காட்டின் வழியாகக்கொடுக்கப்படும் இந்த சாட்சி, நமக்கொரு அருமையான பாடமாக அமைகிறது. "மேகம் போன்ற" திரளான சாட்சிகளில் ஒன்றாகிய ரூத் நமக்குள் செயலாற்ற வேண்டிய இரக்கம், நீடிய சகிப்பு, அன்பு, பக்தி, சாந்தம், தாழ்மை மற்றும் ஊழியம் செய்தல் போன்ற குணங்களைப் பற்றி பேசுகிறது. தாவீது இராஜாவின் வம்சவழியில் ஒருவராக இருப்பதற்கு தேவனால் ரூத் ஆசீர்வதிக்கப்பட்டாள். இப்படியாக இயேசுவின் வம்ச வழியிலும் இடம்பெற்றாள். மேலும் தம்முடைய குமாரனாகிய இயேசுவுக்கு தேர்வு செய்யும் அழைக்கப்பட்ட மணவாட்டி வகுப்புக்கான பாடங்களும் அடையாளப்படுத்துகிறது. இவ்வாறாக, இந்த விஷயத்தில், எடுத்துக்காட்டுகளின் வழியாக நமக்கு ஒரு நல்ல அறிவுரையோடு, நிழலும் நிஜமுமான பாடத்தின் மூலம் சில ஆழமான கட்டளைகளும் கொடுக்கப்படுகிறது.

**நிகழ்ச்சி விரிவுரை**

கிமு 1046 – கிமு 1035-க்கு இடையில் வாழ்ந்த தீர்க்கதரிசியாகிய சாமுயேலினால், ரூத் புத்தகம் எழுதப்பட்டதாக தோன்றுகிறது. மத்தேயு 1:5-ஆம் வசனம் பிரதிப்பலிப்பதுபோல ஒரு புறஜாதி ஸ்திரீ இயேசுவின்வம்சவழியில் எவ்வாறு இடம் பெற்றாள் என்பதை ரூத் புத்தகம் விவரிக்கிறது.

தேசமெங்கும் ஒரு மிகப்பெரிய பஞ்சம் உண்டானபடியால், யூதேயாவிலுள்ள பெத்லெகேமில் ஒரு குடும்பம் சிறிது காலம் இஸ்ரயேல் தேசத்தை விட்டுப்புறப்பட்டு, மோவாப் தேசத்தில் வாழலாம் என்று தீர்மானித்தார்கள். அந்தக் குடும்பத்தை நடத்திய தலைவனின் பெயர் எலிமெலேக்கு, அவருடைய மனைவி நகோமி, அவர்களின் இரண்டு புத்திரர்கள் மக்லோன் கிலியோன் (ரூத் 1:2).

நகோமியின் கணவர் மரித்து விட்டார். குமாரர்கள் இருவரும் மோவாபிய பெண்களை மணந்தார்கள். அதில் ஒருவள் ஓர்பாள், மற்றொருவள் ரூத். வெகு சீக்கிரத்தில் நகோமியின் இரண்டு புத்திரரும் மரித்தார்கள். "கர்த்தர் அவருடைய ஜனங்களை சந்தித்து ஆகாரம் அருளினார்" என்று நகோமி கேள்விப்பட்டபோது, அவள் பெத்லெகேமுக்கு திரும்புவதற்கு முடிவெடுத்தாள். ஆனால் அவளுடைய இரண்டு மருமக்களும் அவளை விடவில்லை. "நகோமி தன் இரண்டு மருமக்களையும் நோக்கி: நீங்கள் இருவரும் உங்கள் தாய்வீட்டுக்குத் திரும்பிப்போங்கள். கர்த்தர் உங்கள் இருவருக்கும் வாய்க்கும் புருஷனுடைய வீட்டிலே நீங்கள் சுகமாய் வாழ்ந்திருக்கச் செய்வாராக" (ரூத் 1:8-9) என்று நகோமி அவர்களிடம் கெஞ்சி கேட்டபின் ஓர்பாள் அவளுடைய தேசத்திற்குத் திரும்பினாள்.

ஆனால் "ரூத், நான் உம்மைப்பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப் போவதைக்குறித்து என்னோடே பேச வேண்டாம். நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன் நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன் உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம் உம்முடைய தேவன் என்னுடைய தேவன். நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம் பண்ணப்படுவேன் மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மைவிட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்" (ரூத் 1:16-17) என்று ரூத் கூறினாள். ஆகையால் இருவரும் பெத்லெகேமுக்கு ஒருமித்து பயணித்தார்கள். அவர்கள் பட்டணத்தைச் சேர்ந்தபோது, அவள் தன்னை "நகோமி" என்று அழைக்கப்படுவதை விரும்பாமல், சர்வவல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார் என்று சொல்லி தன்னை "மாராள்" என்று அழைக்கும்படி கேட்டுக்கொண்டாள். மாரா என்பதற்கு கசப்பு என்று பொருள் (ரூத் 1:13, 20, 21).

ஒருநாள் ரூத், வயலுக்குச் சென்று கதிர்களைப் பொறுக்கிக்கொண்டு வருவதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டாள் (ரூத் 2:2). தற்செயலாக அவள் எலிமெலேக்கின் குடும்பத்தைச் சேர்ந்த ஐசுவரியமுள்ள மனுஷனாகிய போவாசின் வயலுக்குச் சென்று கதிர்களைப் பொறுக்கினாள்.

போவாஸ் ரூத்தைப்பார்த்தபோது, "இந்தப் பெண்பிள்ளை யாருடையவள்" என்று தன்னுடைய ஊழியக்காரரிடம் கேட்டார். "அறுக்கிறவர்கள்மேல் கண்காணியாக வைக்கப்பட்ட அந்த வேலைக்காரன் பிரதியுத்தரமாக: இவள் மோவாப் தேசத்திலிருந்து நகோமியோடேகூட வந்த மோவாபிய பெண்பிள்ளை" (ரூத் 2:5, 6) என்று அந்த ஊழியக்காரன் பதிலளித்தான். இந்த அறுவடை காலம் முழுவதும் தம்முடைய ஊழியக்காரர்களோடு வேலை செய்து, அங்குள்ள தண்ணீரைக் குடிக்கும்படிக்கு அந்த வயலின் எஜமானாகிய போவாஸ் ரூத்தினிடம் கூறினார் (ரூத் 2:8, 9).

போவாஸ் தன்னிடம் தயவாக நடந்து கொண்டதை ரூத் உணர்ந்தபோது, அவள் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கி: நான் அந்நிய தேசத்தாளாயிருக்க, நீர் என்னை விசாரிக்கும்படி எனக்கு எதினாலே உம்முடைய கண்களில் தயை கிடைத்தது என்றாள். "போவாஸ் பிரதியுத்தரமாக: உன் புருஷன் மரணமடைந்தபின்பு, நீ உன் மாமியாருக்காகச் செய்ததும், நீ உன் தகப்பனையும், உன் தாயையும், உன் ஜந்ம தேசத்தையும்விட்டு, முன்னே நீ அறியாத ஜனங்களிடத்தில் வந்ததும் எல்லாம் எனக்கு விவரமாய்த் தெரிவிக்கப்பட்டது. உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக; இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக" (ரூத் 2:11-12) என்று போவாஸ் பதிலளித்தார்.

வீடு திரும்பியபோது அவளுக்குச் சம்பவித்தையும், போவாசின் கண்களில் கிருபை கிடைத்ததையும் குறித்து ரூத்தின் மாமியிடம் கூறினாள். போவாஸ் நெருங்கிய சொந்தக்காரராக இருந்ததினாலும், அவளை மீட்டுக்கொள்வதற்கு அவன் உரிமைப் பெற்றிருந்ததினாலும் போவாசின் மனைவியாகுவதற்கான ஆலோசனையை நகோமி ரூத்திடம் கூறினாள்.

போவாஸ் அவளைக் கண்டபோது: "மகளே, நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாயாக; நீ தரித்திரரும் ஐசுவரியவான்களுமான வாலிபர்களின் பிறகே போகாததினால், உன் முந்தின நற்குணத்தைப்பார்க்கிலும் உன் பிந்தின நற்குணம் உத்தமமாயிருக்கிறது. இப்போதும் மகளே, நீ பயப்படாதே; உனக்கு வேண்டிய படியெல்லாம் செய்வேன்; நீ குணசாலி என்பதை என் ஜனமாகிய ஊராரெல்லாரும் அறிவார்கள். நான் சுதந்திரவாளி என்பது மெய்தான்; ஆனாலும் என்னிலும் கிட்டின சுதந்திரவாளி ஒருவன் இருக்கிறான்" (ரூத் 3:10-12) என்று கூறினார்.

மறுநாள் காலையில் பட்டணத்தின் பத்து மூப்பர்களை அழைத்துக்கொண்டு, ரூத்தை மீட்பதற்கு உரிமைப்பெற்றிருந்த உறவினரிடம் போவாஸ் சென்றார். "அப்பொழுது போவாஸ்: நீரே நகோமியின் கையிலே அந்த வயல் நிலத்தை வாங்குகிற நாளிலே மரித்தவனுடைய சுதந்திரத்தில் அவன் பேரை நிலைநிற்கப் பண்ணும்படி அதை மரித்தவன் மனைவியாகிய மோவாபிய ஸ்திரீயான ரூத் கையிலும் வாங்க வேண்டியது" (ரூத் 4:5) என்று போவாஸ் அவரிடம் கூறினார். ஆனால் அந்த நெருங்கிய உறவினர் தன்னுடைய சொந்த பரம்பரைக்கு இடறல் வந்துவிடுமோ என்று பயந்து

ரூத்தை மீட்டுக்கொள்ள விரும்பவில்லை. இப்படியாக, அந்த மோவாபிய ஸ்திரீயாகிய ரூத்தையும், நகோமியையும் மற்றும் எலிமெலேக்கின் குடும்பத்திற்குரிய அனைத்தையும் போவாஸ் மீட்டுக்கொண்டார். அக்காலத்தில் நன்கு ஸ்தாபிக்கப்பட்டிருந்த வழக்கத்தின் படி பட்டணத்தின் மூப்பர்களுக்குமுன் அந்த இரண்டு மனுஷரும் தங்களுடைய பாதரட்சைகளை மாற்றிக் கொண்டனர். இவ்வாறாக ரூத் போவாசின் மனைவியானாள். அவள் அவனுக்கொரு குமாரனைப் பெற்றாள். அவனுக்கு ஓபேத் என்று பெயரிட்டார்கள். இந்த ஓபேத் தாவீதின் தாத்தாவாக இருந்தார்.

**பொருள்:**

இளவயதான மோவாபிய பெண்ணான ரூத், நேர்மையுள்ளவளும், மனத்தாழ்மையுள்ளவளும், விசுவாசமுள்ளவளும், தன்னுடைய மாமியை அதிகமாக நேசித்தவளுமாக இருந்ததினால் அவள் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவள் என்பதை நாம் காணலாம். இதிலிருந்து நாம் இன்னும் சில முக்கியமான பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம். இஸ்ரயேலில், ஜனங்களுடைய (நபர்கள்) பெயர்களுக்கு ஆழமான முக்கியத்துவம் உண்டு. ரூத் என்பதற்கு, "சிநேகிதர், நெருங்கியவர், நட்பு, அழகு" என்று பொருள். மேலும், நகோமி என்பதற்கு "மகிழ்ச்சி" என்று நாம் அறிந்திருக்கிறோம். போவாஸ் என்பதற்கு "பெலன்" என்று பொருள். (Youngs concordance. 1 இராஜாக்கள் 7:21). ஒரு வேளை தேவனால் அவர் பெலனடைவார் என்று பொருள் கூறலாம். ஓபேத் என்பதற்கு அடிமை என்று பொருள். தேவனுடைய ஊழியக்காரன் என்பது ஆராதிப்பவர் என்று பொருள். ரூத் அவளுடைய பெயரின் அர்த்தம் மற்றும் அவளுடைய நற்குணத்தின் இயல்புகள், கிறிஸ்துவின் மணவாட்டியை அடையாளப்படுத்துகிறது. பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகளை அடையாளப்படுத்தும் நகோமிக்கு (மாமி) ரூத் செவிக்கொடுத்ததினால் அவள் போவாசின் (கிறிஸ்து) மனைவியானாள்.

அதேவிதத்தில் பழைய தீர்க்கதரிசிகளால் கொடுக்கப்பட்ட ஆலோசனைகளைக் கண்டு அதற்குச் செவிக்கொடுத்ததால், தேவனுடைய சபை பரலோக மணவாளனுக்கு மணவாட்டி ஆவார்கள் (சங்கீதம் 45:10-11). நகோமிக்கு ஏற்பட்டதுபோல தீர்க்கதரிசிகளும், கர்த்தருடைய நாமத்திற்கு முழு மகிழ்ச்சியோடும், பக்தி வைராக்கியத்தோடும் தங்களுடைய ஊழியத்தைத் துவங்கினார்கள். ஆயினும் எரேமியா மீகா எலியா யோவான் ஸ்நானன் மற்றும் பலர் அவர்களின் ஊழியத்தின் பலனாக அதிகமான துன்பத்தையும், கசப்பையும், பாடுகளையும் சந்தித்தார்கள்.

வேதாகம கணிப்பின்படி பெயர் சொல்லப்படாத ஒரு தனிப்பட்ட நபரைப்பற்றியும் சொல்லப்படுகிறது (ரூத் 4:1). இவர் நகோமியின் நெருங்கிய சொந்தக்காராக இருந்தார். அந்த மனுஷன் புறஜாதியாகிய ரூத்தை மீட்டுக்கொள்ள விரும்பவில்லை. ஆனால் எலிமலேக்கின் குடும்பத்தின்மேல் ஆர்வம் கொண்டிருந்தார். இந்த மனுஷன் இஸ்ரயேல் ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தை அடையாளப்படுத்துவதைப் போல் தோன்றுகிறது. இந்த நியாயப்பிரமாணம் புறஜாதிகளுக்கு எந்தவிதமான வாக்குத்தத்தங்களையும், ஏற்பாடுகளையும் கொடுக்கவில்லை. அது இஸ்ரயேல் ஜனங்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது.

நம்முடைய பாடத்தில் இயேசு கிறிஸ்துவை போவாஸ் அடையாளப்படுத்துவதை தேவனுடைய வார்த்தையில் நாம் காணலாம். இவர் நியாயப்பிரமாணத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வரையில் மீட்பைக் கொடுக்கவில்லை (எபேசியர் 2:11-18; ரோமர் 10:4). ரூத்தின் சுதந்திரவாளியைச் சரியான முறையில் கையாளும் வரையில், போவாஸ் ரூத்தை மனைவியாக்கிக்கொள்ள முடியவில்லை என்ற உண்மையில் இது காணப்படுகிறது. போவாசுக்கும், ரூத்துக்கும் பிறந்த குழந்தை நகோமியினால் வளர்க்கப்பட்டக் காரியம் மனித குடும்பங்கள் சீர்பொருந்தும் காலத்தை அடையாளப்படுத்துகிறது. ஆயிர வருட ஆட்சியில், ஆண்டவராம் இயேசு சபையோடு மரணத்திலிருக்கும் முழு மனுக்குலத்தையும் எழுப்புவார். எழும்பப்பட்ட அனைவரும் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளிடமிருந்து கட்டளைப் பெறுவார்கள்.

இறுதியாக தன்னுடைய மருமகள் ஒரு குமாரனைப் பெற்றுக்கொடுத்ததினால் நகோமி மிகுந்த சந்தோஷமாக இருந்ததுபோல, பரலோக மணவானள் மற்றும் மணவாட்டியின் பிள்ளைகளாகிய இந்த மனுக்குலம் கல்லறைகளிலிருந்து எழும்பிவரும் காட்சியைக் கண்டு தீர்க்கதரிசிகள் மகிழ்ச்சி அடைவார்கள்.

**நல்ல இருதயம் கொண்ட இராஜா**

# எசேக்கியாவிடமிருந்து பாடங்கள்

"இஸ்ரயேலின் இராஜாவாகிய ஏலாவின் குமாரன் ஓசெயாவின் மூன்றாம் வருஷத்திலே ஆகாஸ் என்னும் யூதாவுடைய இராஜாவின் குமாரனாகிய எசேக்கியா இராஜாவானான். அவன் இராஜாவாகிறபோது, இருபத்தைந்து வயதாயிருந்து . . . அவன் தன் தகப்பனாகிய தாவீது செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான் . . . அவன் இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தரின்மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் இராஜாக்களிலெல்லாம் அவனைப்போல் ஒருவனும் இருந்ததில்லை " (2 இராஜாக்கள் 18:1-5).

**George Eldridge**

யேகோவா தேவனின்மேல், எசேக்கியா கொண்டிருந்த பக்தி, ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கும் ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. அவர் தேசத்திலிருக்கும் பக்தியற்ற ஆராதனையை சுத்திகரித்தார். "அவன் மேடைகளை அகற்றி, சிலைகளைத் தகர்த்து, விக்கிரகத்தோப்புகளை வெட்டி . . . அவன் கர்த்தரை விட்டுப் பின்வாங்காமல் அவரைச் சார்ந்திருந்து, கர்த்தர் மோசேக்குக் கற்பித்த அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நடந்தான்" (2 இராஜாக்கள் 18:4, 6). கிறிஸ்துவின் எந்த சீஷர்களுக்கும், இவ்விதமான பக்தி வைராக்கியத்திற்கான அறிவுரை ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது. இஸ்ரயேலைச் சரியாக நடத்துவது இராஜாவாகிய எசேக்கியாவின் முழு பொறுப்பாக இருந்தது. தந்தை, தாய், ஆசிரியர்கள் அல்லது தலைவர்களாக இருக்கக்கூடிய நாம் நம்முடைய பொறுப்புகளை நிறைவேற்றுவதில், எசேக்கியாவின் பக்தியை இருதயத்திற்குள் ஒரு மாதிரியாக எடுத்துக்கொள்ளலாம்.

**நிழலான பாடங்கள்**

பக்தி வைராக்கியத்திற்கு ஒரு மாதிரியாக இருப்பதற்கும் கூடுதலாக, எசேக்கியேலின் வாழ்க்கை அனுபவங்களும், நமக்கு அடையாளமான அர்த்தங்களைக்கொண்டுள்ளது. அசரியாவின் இராஜா, சனகெரிப்பின் படையெடுப்பு, தேவனுடைய கரத்தினால் பெற்ற அற்புதமான விடுதலையானது (ஏசாயா 36, 37 அதிகாரங்கள்) இவைகளின் ஓர் எடுத்துக்காட்டாகும்.

எசேக்கியாவின் நாளில் நடந்த இரட்சிப்பு, சுவிசேஷ யுகத்தின் இறுதி யுகத்தில், இஸ்ரயேல் இரட்சிக்கப்படுவதற்கு ஒரு சித்திரம் என்று பல வேதமாணவர்களால் ஒத்துக்கொள்ளப்படுகிறது. 38-ஆம் அதிகாரத்தில், எசேக்கியேல் இந்தச் சம்பவத்தை கோகின் தாக்குதல் என்றும் வெளிப்படுத்தல் 17:14-ஆம் வசனத்தில் யோவான் ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் பத்து இராஜாக்களும் மற்றும் மிருகமும், ஆட்டுக்குட்டியானவரோடும், அவரோடு இருப்பவர்களாகிய அழைக்கப்பட்டவரும், தெரிந்தெடுக்கப்பட்டவரும் மற்றும் விசுவாசமுள்ளவ ரோடும் நடக்கும் யுத்தம் என்று அழைக்கிறார்.

அரங்கேறிய இந்த சம்பவத்திற்கு வழி நடத்தின எசேக்கியாவின் ஆட்சியில் நடந்த சம்பவங்களை ஏசாயாவின் புத்தகம் தவிர்த்துவிட்டது. ஆயினும், 2 இராஜாக்கள் 18:18, 19; 2 நாளாகமம் 18:29-32-ஆம் அதிகாரங்களில் இந்த முக்கியமான விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. எசேக்கியா துன்மார்க்கமான இராஜாவாகிய ஆகாசுக்குப் பிறந்தவர். இந்த ஆகாஸ் ஆலயத்தை மூடி, அதிலுள்ள பாத்திரங்களைப் பயனற்றதாக்கி, புறச் சமயத்தினருடைய விக்கிரகாராதனைக்குரிய சடங்குகளுக்குப் பயன்படுத்தினான். தனித்து ஆட்சிசெய்வதற்கு முன் எசேக்கியா தன் தந்தையுடன் சில காலம் சிங்காசனத்தில் பங்கு பெற்றார். இந்தக் கால பகுதியில், தேசத்தின் நிலை, இவருடைய நீதியான இருதயத்தைத் துயரப்படுத்தியிருக்கும். அவர் அதிகாரத்தைப் பெற்றபோது, தேசத்தை மீண்டும் மெய்யான தேவனிடத்தில் திருப்ப வேண்டுமென்று அவர் உறுதி எடுத்தார். முதல் காரியமாக சுத்திகரிக்கும் வேலைக்காக ஆலயத்தின் கதவுகளைத் திறந்தார்.

நிஜமான ஆலயம் சபையென்றும், இயேசுவைத் தலையாகக்கொண்டிருக்கும் கிறிஸ்துவின் சரீரம் என்றும், புதிய ஏற்பாட்டில் நமக்குச்

சொல்லப்படுகிறது. "ஆகையால், நீங்கள் . . . அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாய் இருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்துதாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாய் எழும்புகிறது " (எபேசியர் 2:19-21). "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?" (1 கொரிந்தியர் 3:16).

ஒரு அமைதியின்மையான காலத்தில் எசேக்கியா வளர்ச்சியடைந்தார். யூதேயாவை மத்தியில் கொண்டு, சுற்றியிருந்த தேசங்கள் ஒன்றையொன்று கட்டுப்படுத்தப் போராடிக்கொண்டிருந்தன. மேற்கு ஆசியா முழுவதையும் கைப்பற்றுவதற்கு அசிரியா குறி வைத்தது. சனகெரிப்பின் பார்வை எருசலேமின்மேல் நிலையாக நின்றது. எசேக்கியா ஆலயத்தைத் திறந்து, ஆசாரியர்களையும் லேவியர்களையும் அழைப்பித்தார். அவர்களையும் ஆலயத்தையும் சுத்திகரிக்கும்படி எசேக்கியா கட்டளையிட்டார். புறஜாதியாரின் சகலவிதமான சடங்குகளையும் அவைகளின் உடமைகளையும் கீதரோன் ஆற்றில் எறிந்து இவைகளை முடிவுக்குக்கொண்டுவந்தனர் (2 நாளாகமம் 29:16).

தன்னுடைய தேசத்தைப் பயமுறுத்தும் நாடுகளுக்கு உகந்தவராக நடந்துகொள்வதற்கு, அசுத்தமான, அழுக்கான மற்றும் பாவமுள்ள புறஜாதியாரின் சடங்குகளை ஆகாஸ் இராஜா அனுமதித்தான். இவைகள் அனைத்தையும் எசேக்கியா சுத்திகரித்தார். அநேகமாய், இந்தச் சம்பவம் இஸ்ரயேலில் நடக்கும் ஒரு துப்புரவாக்குதலைக் காட்சிப்படுத்தலாம். எப்படியெனில், டால்மட் (Talmud) என்றும் யூதர்களின் சட்டத் தொகுதியின் மிதமிஞ்சிய சேர்த்தலான மற்றும் கிறிஸ்துவை யூதர்கள் நிராகரிப்பதற்குத் தொடர்புடைய அனைத்து விதிகளையும் துப்புரவு செய்தலைக் குறிக்கலாம்.

சில வருடங்களுக்கு முன், அசிரியர் இஸ்ரயேலின் வடக்கு இராஜ்யத்தைக் கைப்பற்றியதை எசேக்கியா அறிந்திருந்தார். "இப்போதும் இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தருடைய உக்கிரகோபம் நம்மைவிட்டுத் திரும்பும்படிக்கு, அவரோடே உடன்படிக்கைபண்ண என் மனதிலே நிர்ணயித்துக் கொண்டேன்" (2 நாளாகமம் 29:10) என்று அவர் கூறினார்.

அவர்களின் கீழ்ப்படியாமையினாலும் பிரமாணங்களை மீறியதாலும் யூதா கடும் வேதனைகளை அனுபவித்தது. இந்தத் தேசத்தைத் தேவனிடமாகத் திருப்புவதற்கு, எசேக்கியா முழுமையாக அவரிடம் ஒப்புவிக்க விரும்பினார். முதலாம் மாதம் (நீசான்) முதல் நாளிலே ஆசாரியர்களும், லேவியர்களும் தங்களைச் சுத்திகரிக்கத் துவங்கினார்கள். பதினாறாம் நாளிலே அவர்கள் ஆலயத்தை மட்டுமல்ல, பரிசுத்தமான பாத்திரங்களும் திரும்பச் சுத்திகரிக்கப்பட்டதென்று எசேக்கியாவுக்கு அறிவித்தார்கள். எசேக்கியா அதிகாலமே எழுந்து, பட்டணத்தின் ஆளுநர்களைத் திரட்டிக்கொண்டு, ஆலயத்திற்குச் சென்று, இராஜ்யத்திற்கும் ஆலயத்திற்கும் யூதாவுக்கும் பாவ நிவாரணபலியாக அவர் ஏழு காளைகளையும் ஏழு ஆட்டுக்கடாக்களையும் ஏழு ஆட்டுக்குட்டிகளையும் ஏழு வெள்ளாட்டுக்கடாக்களையும் கொண்டு வந்தார். ஏழாம் மாதம் பத்தாம் தேதி அன்று தேவன் நியமித்திருந்த ஒப்புரவாக்குதலின் நாளாக இது இருக்கவில்லை. ஆனால் அனைத்து இஸ்ரயேலர்களுக்கு இது ஒரு விசேஷித்த ஒப்புரவாகுதலின் பண்டிகையாக இருந்தது.

இது முழு சபையிலும் துதி பாடல்களோடு ஆராதனை தொடர்ந்தது. பின்பு ஜனங்களைத் தங்களுடைய பலிகளையும் நன்றியுள்ள காணிக்கைகளையும், தேவனுடைய வீட்டிற்குக் கொண்டுவரும்படி எசேக்கியா கூறினார். உடனே ஜனங்கள் தகனபலிக்கான அநேக மிருகங்களைக் கொண்டுவந்ததினால், அவைகளை வெட்டி, பலி செலுத்துவதற்கு இயலாமல் போனதினால் லேவியர்கள் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டியதாக இருந்தது.

இந்த அறிக்கை 2 நாளாகமம் 29-லிருந்து 36-ஆம் வசனம் வரையில் முடிவடைகிறது. "தேவன் ஜனத்தை ஆயத்தப்படுத்தினதைக் குறித்து

எசேக்கியாவும் ஜனங்கள் எல்லாரும் சந்தோஷப்பட்டார்கள்" அசரியர்களின் படையெடுப்பு மற்றும் அற்புதமாக தேவனுடைய கரத்தினால் வந்த இரட்சிப்பைத் தொடர்ந்து, "ஜனங்களை ஆயத்தப்படுத்தியது." ஒருவேளை கடைசி யுத்தத்தில் அவரை நம்பும்படிக்கு அவருடைய ஜனங்களின் மனநிலையைப் பெறுவதற்குத் தேவன் உறுதி செய்ததை இதை அடையாளப்படுத்துவதாக இருக்கலாம்.

**பஸ்கா**

எசேக்கியா பஸ்காவை அநுசரிக்கும்படி கட்டளையிட்டார் என்று 2 நாளாகமம் 30-ஆம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. நீசான் 14-ஆம் தேதி பஸ்கா அநுசரிக்க வேண்டிய தேதியாக இருந்தாலும் நீசான் 16-ஆம் தேதி வரைக்கும் ஆலயம் சுத்திகரிக்கப்படாமல் இருந்தது (2 நாளாகமம் 29:17). எசேக்கியா தன்னுடைய பிரபுக்களோடும், சபையாரோடும் ஆலோசித்து, இரண்டாம் மாதம் பத்தாம்தேதி பஸ்காவை அநுசரிக்கலாம் என்று அறிவித்தார்.

எண்ணாகமம் 9:5-11-ஆம் வசனத்தில், சரியான தேதியான நீசான் 14-ஆம் நாள் பஸ்கா அநுசரிக்க வேண்டுமென்று தேவனுடைய வார்த்தையை நாம் பெற்றுள்ளோம். ஆயினும், சிலர் பிரேதத்தால் தீட்டுப்பட்டதினால் ஏழுநாளளவும் அசுத்தமாக இருந்தார்கள் என்று 6 மற்றும் 7-ஆம் வசனங்கள் கூறுகிறது. இப்படிப்பட்ட அசுத்தமானவர்கள் இரண்டாம் மாதம் 14-ஆம் தேதி பஸ்காவை அநுசரிக்க வேண்டுமென்று தேவன் மோசேயிடம் கூறியிருந்தார். ஆகவே எசேக்கியா மேற்கூறப்பட்டவையிலிருந்து இரண்டாம் மாதம் பஸ்காவை அநுசரிப்பது ஏற்றதாக இருக்குமென்ற முடிவை எடுத்திருக்கலாம்.

ஆயினும் உண்மையில் ஆசாரியர்களும் லேவியர்களும் ஆலயத்தைச் சுத்திகரித்து பரிசுத்தப்படுத்தும் வேலையை முடிக்கவில்லை என்ற ஒரு நியாயமான காரணத்தினால், பஸ்கா தாமதமாக அநுசரிக்கப்பட்டதென்று எண்ணாகமம் குறிப்பிடவில்லை. பிரேதத்தினால் தீட்டுப்பட்டதினால் பஸ்கா தாமதமாக அநுசரிக்கப்பட்டதே நியாயமான காரியமாகச் சொல்லப்பட்டது.

ஒரு தோட்டக்காரன் திராட்சத் தோட்டத்தை நாட்டி, அதைக் குத்துகைக்கு விட்டுச்சென்றார். அதற்குப்பின் அதன் கனிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தம்முடைய ஊழியக்காரர்களை அனுப்பினபோது, அவர்களை அடித்து கல்லெறிந்து, மற்றவரைக் கொன்றும்போட்டார்கள். அதற்குப் பின் "என் குமாரனுக்கு அஞ்சுவார்கள் என்று சொல்லி" அவருடைய ஒரே பேறான குமாரனை அனுப்பினார். அப்பொழுது "இவன் சுதந்திரவாளி, இவனைக் கொன்று இவன் சுதந்திரத்தைக் கட்டிக்கொள்வோம் வாருங்கள்" என்று கூறினார்கள். இவரே சுதந்திரவாளி என்றும் குமாரன் என்பதையும் அறிந்திருந்தார்கள். இந்த உவமையைத் தங்களைக்குறித்துப் பேசுகிறார் என்பதை பரிசேயரும், பிரதான ஆசாரியர்களும் நன்கு உணர்ந்திருந்தார்கள் (மத்தேயு 21:33-38).

ஒருவேளை எசேக்கியா பஸ்காவை இரண்டாம் மாதத்திற்கு ஒத்தி வைப்பதற்கு இந்தப் பகுதிக்கு சம்பந்தம் உடையதாக இருக்கலாம். இஸ்ரயேல் தங்களுடைய மேசியாவை தேவனுடைய குமாரனை, சுதந்திரவாளியைப் புறக்கணித்துக் கொலை செய்த குற்றத்தை உணரக்கூடிய காலத்தை இது சித்தரிக்கலாம். இதிநிமித்தம், இவர்கள் பிரேதத்தினால் தீட்டுப்பட்டு அசுத்தமாகியிருக்கலாம்.

**சிலர் இன்னும் அசுத்தமாக உள்ளனர்**

ஒரு வேளை போதாமையின் உணர்வினால், இரண்டாம் மாதம் 14-ஆம் தேதி பஸ்காவை அடித்தார்கள் என்று 2 நாளாகமம் 30:15-ஆம் வசனம் கூறுகிறது. "ஆசாரியர்களும், லேவியர்களும் வெட்கப்பட்டார்கள்." இதைச் சகரியா 12:10-ஆம் வசனத்திலுள்ள தீர்க்கதரிசனத்திற்குத் தொடர்புள்ளதாக இருக்கலாம். "அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்."

ஜனங்களில் அநேகர் இந்த மகா பஸ்காவின்போது சுத்திகரிக்கப்படவில்லை. ஆகவே லேவியர்கள் ஆடுகளை அடிப்பதற்கு நியமிக்கப்பட்டார்கள். அனைவரையும் மன்னிக்கும்படி

எசேக்கியா ஜெபித்தார். தேவன் எசேக்கியாவைக் கேட்டருளினார். அவர், "ஜனங்களைச் சொஸ்தப்படுத்தினார்" (2 நாளாகமம் 30:20). இஸ்ரயேல் ஜனங்கள் மனம்வருந்துதலோடு தேவனிடம் வந்தபோது, அவர் அவர்களுக்குக் கிருபை அளித்தார். பஸ்கா முடிந்தபோது ஜனங்கள் தங்களுடைய பட்டணங்களுக்குச் சென்று, எல்லா சிலைகளையும் உடைத்து, அனைத்தையும் அழிக்கும்படி உயர்ந்த மேட்டிலிருந்த தோப்புகளை வெட்டினார்கள். சகலவிதமான விக்கிரகங்களும் போய்விட்டது. அதாவது கிறிஸ்துவை மையமாகக் கொண்டிருக்கும் சத்தியத்திற்கு எதிராக இருக்கும் அனைத்தும் போக வேண்டும். சகலவிதமான தவறான ஆராதனைகளும் போய்விட வேண்டும்.

## சீர்பொருந்தும் வேலை தொடர்ந்தது

அதற்குப்பின், எசேக்கியா ஆலயத்தை அதனுடைய பரிசுத்தத்திற்கு மீண்டும் சீர்பொருத்தினார் (2 நாளாகமம் 31:2-11). "அவன் தேவனுடைய ஆலயத்தின் வேலையிலும், தன் தேவனைத் தேடும்படிக்கு நியாயப்பிரமாணத்திற்கும் கற்பனைக்கும் அடுத்த காரியத்திலும் என்ன செய்யத்தொடங்கினானோ, அதை எல்லாம் தன் முழு இருதயத்தோடும் செய்து சித்திபெற்றான்" (2 நாளாகமம் 31:21). அதற்குப் பின் (2 நாளாகமம் 32:1) சனகெரிப்பின் பயமுறுத்தல் வந்தது. ஒருவேளை இந்தப் படையெடுப்பிற்கு முன் இஸ்ரயேலர்கள் செல்வச் செழிப்போடு இருந்ததை எசேக்கியா 38:11, 12 வசனங்களில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். "நான் கொள்ளையிடவும் சூறையாடவும், மதில்களில்லாமல் கிடக்கிற கிராமங்களுள்ள தேசத்துக்கு விரோதமாய்ப் போவேன்; நிர்விசாரமாய்ச் சுகத்தோடே குடியிருக்கிறவர்களின்மேல் வருவேன்; அவர்கள் எல்லாரும் மதில்களில்லாமல் குடியிருக்கிறார்கள் அவர்களுக்குத் தாழ்ப்பாளும் இல்லை, கதவுகளும் இல்லை என்பாய்."

முன்னதாவே அசிரியா இராஜா சல்மனாசாரின் தலைமையில் இஸ்ரயேலின் வடதேசம் அசிரியாவினால் கைப்பற்றப்பட்டது (2 இராஜாக்கள் 17:3-6). இப்போது சனகெரிப், சுற்றியுள்ள தேசங்களைக் கைப்பற்றிய பின் யூதேயாவின்மேல் கவனம் வைத்தான். "சகல பட்டணங்களுக்கும் விரோதமாய் வந்து, அவைகளைப் பிடித்துக்கொண்டான்" (ஏசாயா 36:1). எந்த தேசமும் தமக்கு முன்பாக எதிர்த்து நிற்க முடியாது என்ற அகந்தையினால், தன்னுடைய உயர் அதிகாரிகளில் ஒருவனாகிய ரப்சாக்கை எருசலேமுக்கு அனுப்பி, அவர்களை சரணடையும்படிக்கு ஒரு தகவல் அனுப்பினான்.

எசேக்கியா மிகவும் கலங்கி, ஏசாயாவை அழைத்தனுப்பினார். அவர் இராஜாவுக்கு மிகவும் நெருக்கமாக இருந்ததினால், ஏசாயா அரசு வம்சத்தை சேர்ந்தவர் என்றும் சில விமர்சகர்கள் நம்புகிறார்கள். மத குருக்களின் பரம்பரை, இவர் இராஜாவாகிய அமத்சியாவின் உடன்பிறந்த குமாரன் என்று கோருகிறார்கள். ஒருவேளை, இஸ்ரயேலர்களின் உபத்திரவத்தில் முற்பிதாக்கள் அவர்களோடிருந்து வழிகாட்டி ஆலோசனைக் கூறுவதை இங்கு ஏசாயா குறிப்பிடலாம். "அசீரியன் நம்முடைய தேசத்திலே வரும்போதும் நம்முடைய அரண்மனைகளை மிதிக்கும்போதும், ஏழு மேய்ப்பரையும் மனுஷரில் எட்டு அதிபதிகளையும் அவனுக்கு விரோதமாக நிறுத்துவேன்" (மீகா 5:5).

"அசீரியா இராஜாவின் ஊழியக்காரர் என்னைத் தூஷித்ததும் நீர் கேட்டதுமான வார்த்தைகளினாலே பயப்படாதேயும். இதோ, அவன் ஒரு செய்தியைக்கேட்டு, தன் தேசத்துக்குத் திரும்புவதற்கான ஆவியை நான் அவனுக்குள் அனுப்பி, அவனை அவன் தேசத்திலே பட்டயத்தால் விழப்பண்ணுவேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்பதை உங்கள் ஆண்டவனிடத்தில் சொல்லுங்கள்" (ஏசாயா 37:6, 7) என்று ஏசாயா கூறினார்.

தேவன் குறுக்கிட்டார். சனகெரிப் பட்டணத்திற்குள் நுழைய முடியவில்லை. அவனால் ஒரு அம்பையும் பட்டணத்திற்குள் எய்ய முடியவில்லை. ஆகவே தேவனாலேயே அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். "என்னிமித்தமும் என் தாசனாகிய தாவீதினிமித்தமும், நான் இந்த நகரத்தை இரட்சிக்கும்படிக்கு இதற்கு ஆதரவாயிருப்பேன் என்பதைக் கர்த்தர் உரைக்கிறார் என்று சொல்லியனுப்பினான்" (ஏசாயா 37:35). இஸ்ரயேலின் விடுதலையை சாத்தியமாக்கும், கிறிஸ்துவை இங்குத் தாவீது அடையாளப்படுத்துகிறார்.

இதற்கிடையில் இரதங்களையும் குதிரைகளையும் பெறக்கூடிய ஒரு நோக்கத்துடன், (இன்றைய தற்காப்பதற்கு அடையாளமாக) எகிப்தோடு ஒரு கூட்டிணைப்பு ஏற்படுத்துவதற்குப் போராடிக்கொண்டு யூதேயாவில் ஒரு அரசியல் உட்கலகம் நடந்துகொண்டிருந்தது. ஏசாயாவின் கோபம் நியாயமாக இருந்தது. இதைக்குறித்து ஏசாயா கோபமடைந்தார் (ஏசாயா 31:1-3).எகிப்து மிகப் பலவீனமாகவும், உதவியற்ற நிலையிலும் இருந்தது. இவர்களின் விசுவாசமற்ற மற்றும் மெய்ப்பற்றற்ற நிலை, எசேக்கியேல் 29:6, 7 வசனங்களில் காண்பிக்கப்படுகிறது. "அவர்கள் உன்னைக் கையிலே பிடிக்கும்போது, நீ ஒடிந்துபோய், அவர்கள் விலாவையெல்லாம் பிளப்பாய்; அவர்கள் இடுப்பு முழுவதையும் மரத்துப் போகப்பண்ணுவாய். ஆகையால் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் உன்மேல் பட்டயத்தை வரப்பண்ணி, உன்னில் மனுஷரையும் மிருகங்களையும் சங்காரம்பண்ணுவேன்."

"கர்த்தருடைய தூதன் புறப்பட்டு, அசீரியரின் பாளயத்தில் இலட்சத்தெண்பத்தையாயிரம் பேரைச் சங்கரித்தான்; அதிகாலமே எழுந்திருக்கும்போது, இதோ, அவர்களெல்லாரும் செத்த பிரேதங்களாய்க் கிடந்தார்கள்" (ஏசாயா 37:36) என்று ஏசாயா கூறுகிறார்.

"இஸ்ரயேல் தேசத்துக்கு விரோதமாக கோகு வரும்காலத்தில் என் உக்கிரம் என் நாசியில் ஏறுமென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். என் எல்லா மலைகளிலும் பட்டயத்தை அவனுக்கு விரோதமாக வரவழைப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; அவனவன் பட்டயம் அவனவன் சகோதரனுக்கு விரோதமாயிருக்கும். கொள்ளைநோயினாலும் இரத்தம் சிந்துதலினாலும் நான் அவனோடே வழக்காடி, அவன்மேலும் அவன் இராணுவங்களின்மேலும் அவனோடிருக்கும் திரளான ஜனங்களின்மேலும் வெள்ளமாய் அடிக்கும் மழையையும், பெருங்கல்மழையையும் அக்கினியையும், கந்தகத்தையும் வருஷிக்கப்பண்ணுவேன். இவ்விதமாய் நான் அநேக ஜாதிகளின் கண்களுக்கு முன்பாக என் மகத்துவத்தையும் என் பரிசுத்தத்தையும் விளங்கப்பண்ணி, அறியப்படுவேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்" (எசேக்கியேல் 38:18, 21-23).

**விடியல் மட்டும் போராடுதல்**

# யாக்கோபின் திரும்புதல்

"அப்பொழுது யாக்கோபு: தேவன் என்னோடே இருந்து, நான் போகிற இந்த வழியிலே என்னைக் காப்பாற்றி, உண்ண ஆகாரமும், உடுக்க வஸ்திரமும் எனக்குத் தந்து, என்னை என் தகப்பன் வீட்டுக்குச் சமாதானத்தோடே திரும்பிவரப்பண்ணுவாரானால், கர்த்தர் எனக்குத் தேவனாயிருப்பார்" (ஆதியாகமம் 28:20, 21).

சுவிசேஷ யுகத்தின் பரிசுத்தவான்களுக்கு அறிவுரை கூறும்வகையில், எபிரெயர் 11-ஆம் அதிகாரத்தில் பவுல் முற்பிதாக்களைப்பற்றி ஆய்வுரை செய்கிறார். விசுவாசத்தைச் செயலாற்றிய முற்பிதாக்களைப்பற்றி நாம் சிந்திக்கையில் அவர்கள், "மேகம் போன்ற சாட்சிகளாக" இருக்கிறார்கள் (எபிரெயர் 12:1).

நம்முடைய விசுவாசத்தை ஊக்குவிக்கும்படிக்கு இவர்களில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபை எடுத்துக்காட்டுகளாக பவுல் மீண்டும் நமக்கு நினைப்பூட்டுகிறார். "விசுவாசத்தினாலே அவன் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப்போல சஞ்சரித்து, அந்த வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும் யாக்கோபோடும் கூடாரங்களிலே குடியிருந்தான்" (எபிரெயர் 11:9). பின்பு பவுல் இந்த முற்பிதாக்கள் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலிருந்துவரும் அனுபவங்களை விவரித்து, விசுவாசத்தைக் கிரியைகளில் காண்பிக்கும் இவர்களின் உதாரணத்தை நம் வாழ்விலும் பின்பற்ற அறிவுறுத்துகிறார்.

### உருவகங்கள்

மற்ற சந்தர்ப்பங்களில் அனுபவங்களின் வாயிலாக இந்த விசுவாசத்தின் தந்தைகள் கடந்து போனதை, அதே முற்பிதாக்களின் வாழ்க்கையை வைத்து, தேவனுடைய திட்டத்தைப்பற்றிய உவமைகளை பவுல் போதிக்கிறார். பவுல் இதை கலாத்தியருக்கு எழுதிய புத்தகத்தில் குறிப்பிடுகிறார். முன்னதாக வந்ததும் தற்காலிகமானதுமான நியாயப்பிரமாண உடன்படிக்கையின்மேல், தேவன் அவருடைய யுகங்களைப்பற்றிய தெய்வீக திட்டத்தில், தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட ஆதியில் கொடுத்த ஆசீர்வாதங்கள் தற்செயலான நிகழ்வுகளல்ல என்று பவுல், கலாத்தியரிலுள்ள சகோதரர்களுக்குக் காட்டுவதே இங்கு முக்கிய நோக்கமாகும் (கலாத்தியர் 3:19). அந்தச் சந்ததி வரும் வரையில், "பூமியிலுள்ள முழு குடும்பங்களையும்" ஆசீர்வதிக்கக்கூடிய நிகழ்ச்சியைத் துவக்குவதற்கு கிறிஸ்து வந்தபின் இது செயலாற்றுவதற்குத் திட்டமிடப்பட்டது. இந்த நிகழ்வு சுவிசேஷ யுகத்தில் சபை அழைக்கப்படும்போது முதலில் துவங்கப்பட்டது (கலாத்தியர் 3:8, 9). மேலும் ஆயிர வருடத்திலும், சாதகமான சூழ்நிலைகளில், தேவனிடமாகத் திரும்புவதற்கு மீண்டும் சீர்பொருந்தக்கூடியவர்கள் அனைவருக்கும் இந்த அழைப்பு தொடரும் (வெளிப்படுத்தல் 22:17).

சபை வகுப்பார் கிறிஸ்துவுக்குள், "ஆபிரகாமின் சந்ததியாகவும், வாக்குத்தத்தின் சுதந்திரவாளிகளுமாக எண்ணப்படுகிறார்கள் என்று பவுல் கூறுகிறார் (கலாத்தியர் 3:29)." ஆகவே, சகோதரர்களாகிய நாம், ஈசாக்கைப்போல வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாக இருக்கிறோம் (கலாத்தியர் 4:28).

அதற்குப்பின் ஆபிரகாமின் மனைவி சாராளும் மற்றும் சாராளின் அடிமைப்பெண் ஆகாரும் நிழலானவர்கள் என்று பவுல் விவரிக்கிறார். ஆபிரகாம் தேவனை அடையாளப்படுத்துகிறார். சாராள் கிறிஸ்துவையும் சபையையும் தேவனோடு வளர்ச்சியடையச் செய்யும் ஆபிரகாம் செய்த உடன்படிக்கையை அடையாளப்படுத்துகிறார். ஆகார் நியாயப்பிரமாண உடன்படிக்கையை அடையாளப்படுத்துகிறார். அவளுடைய குமாரனாகிய இஸ்மயேல் நியாயப்பிரமாணத்திற்கு அடிமைகளாக இருக்கும் இஸ்ரயேலை அடையாளப்படுத்துகிறான். அதற்குப்பின் ஆபிரகாம் கேத்தூராள் என்ற மனைவியை இரண்டாவதாக திருமணம் செய்தார்.

கேத்தூராள் பெற்ற ஆறு குமாரர்களும், 6000 வருடங்களாகப் பாவத்தில் பிறந்த உலக மனுக்குலத்தை அடையாளப்படுத்துகிறார்கள். சாராள் மரித்துப் போனபின் கேத்தூராளுக்கு முழுமையான ஒரு மனைவியின் நிலை கிடைத்தபோது, அவளுடைய குமாரர்களின் நிலையும் உயர்ந்தது. இந்த இரண்டு மனைவிகளும் ஆபிரகாமின் உடன்படிக்கையின் ஆவிக்குரிய மற்றும் பூமிக்குரிய பகுதிகளை அடையாளப்படுத்துகிறார்கள். சாராள் மரித்துப்போனபின், மனைவியாக கேத்தூராளை ஏற்றுக்கொண்டது ஆயிர வருடத்தில் உலகத்தை ஆசீர்வதிப்பதை அடையாளப்படுத்துகிறது.

### வாக்குத்தத்தம் செய்த தேசத்திலிருந்து யாக்கோபின் நீண்ட நாளின்மை

யாக்கோபு மற்றும் ஏசாவைப் பொறுத்தவரையில் மூத்தவன் இளையவனைச் சேவிக்க வேண்டும் என்ற வித்தியாசமான பாடம் உண்டு. யாக்கோபு சுவிசேஷ யுக சபையையும், ஏசா ஆவிக்குரிய சேஷ்ட புத்திர பாகத்தின் மதிப்பை உணராத மாம்ச இஸ்ரயேலரை அடையாளப்படுத்துகிறார். காலத்தில் முதல் இஸ்ரயேலர்கள் வந்திருந்தாலும், மூத்தவனாகிய ஏசாவைப்போல, இவர்களே வாக்குத்தத்தத்தில் முதன்மையான உரிமையாளர்களாக இருந்தார்கள். ஆனால் விசுவாசத்தினால் வாக்குத்தத்தின் சுதந்திரவாளிகளை யாக்கோபு அடையாளப்படுத்தினார். இவர்கள் தேவனுடைய வாக்குத்தத்தத்தை, பூமிக்குரிய சொத்துக்களைக் காட்டிலும் அதிகமாக மதிப்பிடக்கூடியவர்கள்.

ஆயினும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைவிட்டு ஓடி, 20 வருஷங்களுக்குப்பின் வீடு திரும்பின காரியம் வேறொரு காரியத்தைச் சித்தரிக்கிறது. சுவிசேஷ யுகத்தில் வாக்குத்தத்தத்தின் தேசத்தை விட்டுச்சென்ற மாம்ச இஸ்ரயேலர்களை அடையாளப்படுத்துகிறது. இந்த யுகத்தின் முடிவில், ஏசாவை அடையாளப்படுத்தும் தங்களுடைய அரபு சகோதரர்களை நடுக்கத்தோடு சந்திப்பதை அடையாளப்படுத்தும். இந்தக் குறிப்பிலுள்ள கண்ணோக்கத்தில் நாம் காணும்போது, இதுவே யாக்கோபு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குத் திரும்பும் காலமாகும்.

### இருபது வருடங்கள் தொலைவில் இருத்தல்

இரண்டு என்ற எண் பரிசுத்த ஆவியைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக, சகரியா 4-ஆம் அதிகாரத்திலுள்ள இரண்டு ஒலிவ மரங்கள் புதிய ஏற்பாட்டையும், பழைய ஏற்பாட்டையும் அடையாளப்படுத்துகிறது. வெளிச்சத்தைக் கொடுப்பதற்கு, ஏழு கிளைகளுக்கு ஒலிவ எண்ணெய் கொடுக்கும் இரண்டு மரங்கள் இவைகளே. இப்படியாக, வேதாகமத்தில் சில இடங்களில் 2, 20, 200 அல்லது 2000 ஆவியின் முதல் யுகமாகிய இக்காலத்து சுவிசேஷ யுகத்தைச் சித்தரிக்கிறது (யோவான் 4:40; நியாயாதிபதி 15:20 யோவான் 21:8 யோசுவா 3:4). யாக்கோபு கானான் தேசத்தைவிட்டு நாற்பது வருடங்களாகப் பிரிந்துச் சென்ற காலம் சுவிசேஷ யுகத்தை அடையாளப்படுத்தும். இராஜ்யத்திற்கு ஆயத்தமாகும்படிக்கு யுகத்தின் முடிவில் இஸ்ரயேல் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்குத் திரும்பும் (ஆதியாகமம் 31: 38, 41).

### தூதனோடு போராடுதல்

இங்கு நாம் காணக்கூடிய அனுபவங்கள் ஆதியாகமம் 32-35 அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்கு யாக்கோபு திரும்பிவருகையில் தூதர்களைச் சந்தித்தார். இவர்கள் யாக்கோபுக்கு எவ்வாறு காணப்பட்டார்கள் என்பது தெளிவாகச் சொல்லப்படவில்லை. ஆனால் அவர்கள் அதிகமானவர்களாக இருந்தார்கள். "யாக்கோபு அவர்களைக் கண்டபோது: இது தேவனுடைய சேனை என்று சொல்லி, அந்த ஸ்தலத்திற்கு மக்னாயீம் என்று பேரிட்டான்" (ஆதியாகமம் 32:2). மக்னாயீம் என்பதற்கு "இரண்டு சேனைகள்" என்று பொருள். யாக்கோபு தேசம் திரும்பும்போது பெற்ற அனுபவங்களில், தேவனுடைய பிரசன்னம் அவரோடிருந்ததற்கான ஓர் அடையாளமாக இருந்தது. தேவன் யாக்கோபை தேசத்திற்குத் திரும்பும்படி சொன்னார். ஆகவே சகலவிதமான அனுபவங்களும் நன்மைக்கு ஏதுவாக தேவன் மேற்கொள்வார் என்ற உத்திரவாதத்தைப் பெற்றிருந்தார் (ஆதியாகமம் 31:13). யாக்கோபு

தூதர்களைக் கண்டது அது அவருடைய விசுவாசத்தைப் பலப்படுத்தியிருக்கும். யாக்கோபு தாய்நாடு திரும்ப வேண்டுமென்று தேவன் கொடுத்த கட்டளையானது, தீர்க்கதரிசிகள் ஊக்குவித்தபடி நம்முடைய நாட்களில் இஸ்ரயேலர்கள் தங்களுடைய தேசம் திரும்புவதைச் சித்தரிக்கிறது. இந்தத் தூதர்கள் யாக்கோபின் திரும்புதலின்போது, அடிக்கடி கொடுக்கப்பட்ட கடவுளின் அருளினை அடையாளப்படுத்துகிறது.

அவரைக் கொல்ல வேண்டும் என்றளவுக்குக் கோபங்கொண்ட, தம்முடைய சகோதரனாகிய ஏசாவை சந்திப்பதே யாக்கோபைப் பொறுத்தவரையில் ஒரு முக்கியமான கவலையாக இருந்தது (ஆதியாகமம் 27:41). இஸ்ரயேல், தேசம் திரும்பும்போது, தங்களுடைய அரபு சகோதரர்களைக் கண்டு பயப்படுவதற்குக் காரணம் உண்டு. ஏனெனில் அவர்கள் இஸ்ரயேலை அழிப்பதற்கான அவர்களுடைய விருப்பத்தைத் தொடர்ந்து தெரிவித்துக்கொண்டிருக்கின்றனர் (சங்கீதம் 83:4).

அந்நேரத்தில், ஏதோமிலுள்ள சேயீரிலுள்ள ஏசாவுக்கு யாக்கோபு தூதனுப்பினார். ஏசாவின் சொத்துக்களைக் குறித்து எந்தவிதமான போட்டி மனப்பான்மையும் இல்லை என்பதை உறுதிப்படுத்தும் படிக்குத் தனக்குப் போதுமானளவுக்கு கால்நடைகளும், சொத்துக்களும், ஊழியக்காரர்களும் இருந்தார்கள் என்று யாக்கோபு ஏசாவிடம் உத்தரவாதம் அளித்தார். ஆனால் யாக்கோபுக்கு நம்பிக்கை இல்லாதிருந்தது. ஏசா 400 ஆட்களோடு வருவதாக திரும்பிவந்த யாக்கோபின் தூதுவர்கள், அவருக்கு அறிவித்தார்கள். "அப்பொழுது யாக்கோபு மிகவும் பயந்து, வியாகுலப்பட்டு, தன்னிடத்திலிருந்த ஜனங்களையும் ஆடுமாடுகளையும் ஒட்டகங்களையும் இரண்டு பகுதியாகப்பிரித்து" (ஆதியாகமம் 32:7), ஒருவேளை அழிவு நேர்ந்தால், அதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு முன் எச்சரிப்பாக யாக்கோபு தம்முடைய ஜனங்களைப் பல பிரிவுகளாகப் பிரித்தார். ஏசாவின் இருதயம் இலகுவாகும்படிக்கு, அவருக்குப் பரிசாக இவர்களுக்கு முன் சில ஆடு, மாடுகளையும் நடத்திச் செல்லும்படி கூறினார். யாக்கோபு ஓடையைக் கடந்து அவருடைய குடும்பத்தினரை அனுப்பினபின் அனைவரையும் பாதுகாப்பதற்குத் தேவனிடம் உள்ளார்ந்து ஜெபிக்க தனித்து நின்றார். "அப்பொழுது ஒரு புருஷன் பொழுதுவிடியுமளவும் அவனுடனே போராடினான்" (ஆதியாகமம் 32:24).

யாக்கோபோடு போராடிய அந்த "மனுஷன்" ஒரு தூதனாக இருந்தார். யாக்கோபு அந்தத் தூதனின் வழியாக, ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன், அந்தத் தூதனை விடாதிருந்தார். "அவனை மேற்கொள்ளாததைக்கண்டு, அவனுடைய தொடைச்சந்தைத் தொட்டார்; அதினால் அவருடனே போராடுகையில் யாக்கோபின் தொடைச்சந்து சுளுக்கிற்று" (ஆதியாகமம் 32:25). யாக்கோபு முற்றிலும் உள்ளார்வமிக்கவராக இருந்தார். அவர் ஏசாவோடு சமாதானமாக இருக்கவிரும்பினார், தேவன் அவரைக் கேட்டருளினார். "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" (யாக்கோபு 5:16).

போராட்டத்தின் முடிவில், "அவர்: நான் போகட்டும் பொழுது விடிகிறது என்றார். அதற்கு அவன்: நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்" (ஆதியாகமம் 32:26) என்று அந்தத் தூதான் யாக்கோபிடம் கூறினார். இப்படியாக இஸ்ரயேல் பாரத்தோடு போராடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்தப் புதிய நாள் விடியும்வரைக்கும் அவர்கள் தேடும் ஆசீர்வாதங்களைப் பெறமாட்டார்கள்.

அந்தச் சூழ்நிலையில், "அவர்: உன் பேர் என்ன என்று கேட்டார் யாக்கோபு" (ஆதியாகமம் 32:28) என்று அந்தத் தூதன் கூறினார். இப்படியாக தேவனோடு இஸ்ரயேலின் ஐக்கியத்தில் ஒரு புதிய அத்தியாயம் துவங்கியது. ஆக இக்காலத்து இஸ்ரயேலை, அதுபோல தேவன் வெற்றி அடையச்செய்வார். இஸ்ரயேல் விசுவாசத்தின் ஜனமாவார்கள். தேவனுடைய பலத்தினால் இராஜ்யத்தில், ஒவ்வொரு வேலையிலும் அவருடைய பிரதிநிதிகாளகச் செயல்படுவார்கள்.

விடிந்தவுடன் யாக்கோபு அந்த ஓடையைத்தாண்டி, சகோதரரைச் சந்தித்து, கட்டித் தழுவினார். நட்புறவுக்கொண்டு ஓர் அடையாளமாக யாக்கோபினால் அனுப்பப்பட்ட பரிசுகளைக்கண்ட

ஏசாவின் இருதயம் இளகியது. அதுபோல இஸ்ரயேலர்களும், தங்களுடைய தேசம் திரும்பும்போது, சமாதானம் பெறக்கூடிய உறுதியைப் பெறுவதற்கு மட்டுமே, தங்களுடைய அரபிய சகோதரர்களுக்கு எல்லா காரியங்களிலும் கொடுப்பதற்கு மனப்பூர்வமாக விரும்புவார்கள். குறிப்பிடப்பட்ட சண்டைகள் அழுத்தங்களுக்கு 83-ஆம் சங்கீதத்தில் விவரித்தப்படி பின்வரும் காலைப்பொழுதில், இறுதியாக இஸ்ரயேலரின் அரபு சகோதரர்கள் தங்களுடைய சகோதரரின் ஆவியையும் உடன்படும் உணர்வையும் புரிந்துகொள்வார்கள்.

அதற்குப்பின் ஏசா ஏதோமுக்கும், யாக்கோபு மேற்கை நோக்கியும் புறப்பட்டார்கள். யாக்கோபு மீண்டும் இரண்டாவது முறையாக, தென்திசையை நோக்கி ஓடிக்கொண்டிருந்த ஓடையைக் கடந்துச் சென்று யோர்தான் நதியின் கிழக்குவரையில் சுக்கோத்தில் பாளயம் இறங்கினார். கூடாரங்களின் பண்டிகையில், சுக்கோத் என்ற வார்த்தை பலமுறை ஆசரிப்புக்கூடாரம் என்று மொழியாக்கப்பட்டுள்ளது. இந்தப் பண்டிகை, கிறிஸ்துவின் ஆயிர வருட ஆட்சியின் ஆசீர்வாதங்களை அடையாளப்படுத்துகிறது (சகரியா 14:16-19). இறுதியாக, இஸ்ரயேல் சமாதானம் அடைவார்கள்.

### தொடரும் ஏழு அனுபவங்கள்

பின்னர் யாக்கோபு யோர்தானைக் கடந்து கானான் தேசத்திற்குள் பிரவேசித்தப்பின் ஆதியாகமம் 33-35 அதிகாரங்களில் பதிவுகள் காட்டுகிறபடி பல்வகையான அனுபவங்கள் தொடர்ந்தது. பூமியின்மேல் இராஜ்யம் விஸ்தரிக்கப்படும்போது, அந்தப் புதிய நாளின் துவக்கத்தில் வெளிப்படும் காரியங்களை இந்த அத்தியாயங்களில் மற்ற அனுபவங்கள் உருவகப்படுத்துவதாக நாம் கருதுகிறோம். சகலமும் இந்த இடைமாறுதலின் காலத்தில் அமைதியாக இருக்கும் என்று கூறமுடியாது.

**(1) கொள்முதல்** (purchase) யோர்தானுக்கு மேற்கே எதிர்படும் முதல் நகரம் சீகேம், கானானியனாகிய ஏமோரின் குமாரனான சீகேம் என்னும் பெயரை வைத்து ஆதாரப்பூர்வமாகப் பெயரிடப்பட்டது. பின்னர் அபிமெலேக்கின் காலத்தில் (நியாயாதிபதிகள் 9). சீகேம் என்பது அபிமெலேக்கை ஆதரித்தவர்கள் (போப் மார்க்கத்தை அடையாளப்படுத்துகிறது) வாழும் நகரமானது இங்கே சீகேம் என்பது பெயரளவு கிறிஸ்தவ ஜனங்களைக் குறிக்கிறது என்பது தெரிகிறது.

அங்கே, யாக்கோபு, தன்னுடைய கூடாரத்திற்காக சிறு நிலப்பகுதியை 100 ஆட்டுக்குட்டிக்கு ஈடான வெள்ளிக்காசுகள் கொடுத்து வாங்குகிறார் - ஆட்டுக்குட்டியின் மதிப்பு 1 வெள்ளிக்காசு என்பது அதிகாரப்பூர்வமாகத் தெரிகிறது (ஆதியாகமம் 33:19 மற்றும் குறுகிய விளக்கவுரை). அநேகமாய் இது மாம்ச இஸ்ரயேலர்கள், இயேசு தான் நம்முடைய ஈடுபலி, அவர் நமக்காய் மரித்தார் என்கிற கிறிஸ்தவ நம்பிக்கையை விலைக்கு வாங்குவார்கள் என்பதை அறிவுறுத்துகிறது. கிறிஸ்தவ உலகின் குறைபாடுகள் எதுவாக இருப்பினும், அதின் மூல நம்பிக்கை, இயேசு நம்முடைய பாவத்திற்காக மரித்தார் என்பதுதான். இது இஸ்ரயேலுக்கு இயல்பானது இல்லை. ஆனால் அந்நம்பிக்கையை இஸ்ரயேல் இந்தக் கால கட்டத்தில் பெற்றுக்கொள்ளும் (சகரியா 12:10).

ஆட்டுக்குட்டிக்கு ஈடான வெள்ளி என்பது நமக்காக பலியாகும் ஆட்டுக்குட்டியான இயேசுவையே குறிக்கிறது மற்றும் 100 எனும் எண் ஆசரிப்புக்கூடாரத்தில் பல இடத்தில் வருகிறது. இது இயேசுவையே குறிக்கிறது. 100 சதுர முழத்துணி வாசலுக்கும், கதவிற்கும், திரைச்சீலைக்கும் இருந்தது. மற்றும் 100 வெள்ளிப்பாதங்கள் ஆசரிப்புக்கூடாரத்திற்கு அஸ்திபாரமாய் இருந்தது.

**(2) தீனாள்:** இதற்குப் பின் சீகேமை பேரழிவுக்குள் நடத்தும் ஒரு மூலதத்துவமான அனுபவம் தொடர்ந்தது - இஸ்ரயேலின் மீட்பு தொடர்ந்துவரும் நிலையில், கிறிஸ்தவ மண்டலத்தைப் பாழாக்குவதற்கு வழிநடத்தும் ஒரு மூலத்துவமான அனுபவம் நடைபெறும். ஏழாம் வாதையில், வெளிப்படுத்தல் 16-ஆம் அதிகாரத்தில், "மகா நாளின் யுத்தத்திற்கு" தேசங்கள் அனைத்தும் கூட்டிச்சேர்க்கப்பட்டபின், மூன்று அத்தியாயங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடரும். முதலில் யுத்தம், அடுத்து பாபிலோன் விழக்கூடிய பூமியதிர்ச்சி அதற்குப்

பின் கல்மழைவாதை. ஒருவேளை சீகேமின் வீழ்ச்சி, வெளிப்படுத்தல் 16:19-ஆம் வசனத்தில் பாபிலோனின் வீழ்ச்சியோடு தொடர்புடையதாக இருக்கலாம்.

யாக்கோபு, லேயாளிடம் பெற்ற தன்னுடைய குமாரத்தி தீனாளை தீட்டுப்படுத்தினதின் காரணத்தினாலே சீகேம் விழுந்தது [சீகேமின் கவனத்தை ஈர்க்குமளவுக்கு, தீனாள் போதுமானளவுக்கு வளர்ச்சியடையும்படிக்கு சில வருடங்கள் கடந்திருக்கலாம். கடந்துப்போன வருடங்களைப்பற்றித் தெளிவான விளக்கங்கள் ஆதியாகமம் 33-34-ஆம் அதிகாரங்களில் கொடுக்கப்படவில்லை. இல்லையேல், தீனாள் ஒரு சிறுமியாக இருந்திருக்க வேண்டும்]. யாக்கோபின் ஒரே பேறான குமாரத்தி தீனாள், ஆறு சகோதரர்கள் மற்றும் ஒன்றுவிட்ட ஆறு சகோதரர்களோடும் பிறந்தவள். ஆகவே அவள் யாக்கோபின் குடும்பத்தில் தனித்துவமானவளாக இருந்தாள். தீனாள் சீகேமினால் பலாத்காரம் செய்யப்பட்டாள், இதைத் திருத்துவதற்குப் பட்டணத்தார் முயற்சித்தப்போதும் - பூமிக்குரிய ஆதாயத்திற்காக, தங்களுடைய சொந்த நோக்கங்களுக்காக, யாக்கோபின் குமாரர் அந்தப் பட்டணத்தை அழித்து, அதைக் கொள்ளையிட்டார்கள். சுவிசேஷ யுகத்தின் முடிவில், சபை வகுப்பாரை, கிறிஸ்தவ மண்டலம் உபத்திரவப்படுத்துவதன் காரணத்தினால், அது அழிந்துவிடும் என்று கருதப்படுகிறது (வெளிப்படுத்தல் 6:10).

சீகேம் மனுஷர் விருத்தசேதனம் பண்ணப்பட்டனர். ஆயினும், அவர்கள் தங்களைச் சுத்திகரிப்பதற்குரிய அடையாளமாக அதைப் பெற்றுக்கொள்ளவில்லை. யாக்கோபின் குடும்பத்தாருடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டுமென்று காரணம் காட்டினார்கள். "அவர்களுடைய ஆடுமாடுகள் ஆஸ்திகள் மிருகஜீவன்கள் எல்லாம் நம்மைச் சேருமல்லவா? அவர்களுக்குச் சம்மதிப்போமானால், அவர்கள் நம்முடனே வாசம்பண்ணுவார்கள் என்று சொன்னார்கள்" (ஆதியாகமம் 34:23). இந்தக் குறிப்பு, பேரளவில் கிறிஸ்துவை அறிக்கையிடும் கிறிஸ்தவமண்டலத்தின் ஆவியோடு ஒத்திருக்கிறது. ஆயினும் அவர்களின் ஆர்வம் இலாபத்தை நோக்கியே உள்ளது (வெளிப்படுத்தல் 18:12-15).

**(3) சுத்திகரிப்பு:** தேவனுடைய வழி நடத்துதலின் கீழ் யாக்கோபு, பெத்தேலுக்குச் சென்றார் (ஆதியாகமம் 35:1). பதான் அராமிற்குப் பல ஆண்டுகள் முன்பு ஓடிப்போனபோது, அங்குதான் யாக்கோபு, தான் பாதுகாப்பாகத் திரும்பிவந்தால் தேவனுக்கு முழு அர்ப்பணிப்பு செய்யப்போவதாக வாக்குறுதி அளித்திருந்தார். இஸ்ரயேலர் தங்களுடைய தேசத்திற்குப் பத்திரமாகத் திரும்புவதுபோல இப்போது யாக்கோபு பத்திரமாக வீடு திரும்பினார். இப்போது யாக்கோபு தன்னுடைய பொருத்தனையை நினைவுக் கூரும் நேரம் வந்தது. சீகேமிலிருந்துப் புறப்படுவதற்குமுன், யாக்கோபு தன்னுடைய ஜனங்கள் அனைவரிடமும் இருந்த "அந்நிய தெய்வங்களையும்," அவைகளோடு சம்பந்தப்பட்டிருந்த காதணிகளையும் எடுத்துப் புதைத்துவிட்டார் (ஆதியாகமம் 35:4). அதற்குப் பின் அவர்கள் பெத்தேலுக்குப் பயணப்பட்டார்கள். இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டப் பின், இஸ்ரயேலின் பாவங்கள் சுத்திகரிக்கப்படுவதற்கான வேலை நடைபெறும். மற்ற தேசங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் முன்னதாகவே இஸ்ரயேலர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்வார்கள்.

தேவனை முழுமையாகச் சேவிப்பதற்கும், இஸ்ரயேலர்கள் அனைவரும் தங்களை ஒப்புவிப்பதற்கும், சீகேம் பொருத்தமான இடமாக இருக்கிறது. ஆபிரகாம் கானான் வந்தபோது, தேவன் அவருக்கு முதன்முதலில் தரிசனமான இடம் சீகேமாகும் (ஆதியாகமம் 12:6, 7). யோசுவாவின் கீழ் கானான் தேசத்தைக் கைப்பற்றின பின், இஸ்ரயேலர்கள் அனைவரும் தேவனிடத்தில் தங்களை ஒப்புவித்ததற்கு, உறுதிப்படுத்தின இடம் அதே சீகேமாகும் (யோசுவா 24:1). "அப்பொழுது ஜனங்கள் யோசுவாவை நோக்கி: நம்முடைய தேவனாகிய கர்த்தரையே சேவித்து, அவர் சத்தத்திற்கே கீழப்படிவோம் என்றார்கள். அந்தப்படி யோசுவா அந்நாளில் சீகேமிலே ஜனங்களோடே உடன்படிக்கைபண்ணி, அவர்களுக்கு அதைப் பிரமாணமும் நியாயமுமாக ஏற்படுத்தினான்" (யோசுவா 24:21, 24, 25). இராஜ்யத்தின் துவக்கத்தில் இஸ்ரயேல் இப்படியாக தங்களை அர்ப்பணிப்பார்கள்.

**(4)தெபோராள்:** அதன்பிறகு, "ரெபெக்காளின் தாதியாகிய தெபொராள் மரித்து, பெத்தேலுக்குச் சமீபமாயிருந்த ஒரு கர்வாலி மரத்தின்கீழ் அடக்கம்பண்ணப்பட்டாள் அதற்கு அல்லோன்பாகூத் என்னும் பேர் உண்டாயிற்று" (ஆதியாகமம் 35:8). இந்த அதிகாரங்களில், ரெபேக்காளைப்பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஈசாக்கின் மனைவி ரெபேக்காள் சபைவகுப்பாரை அடையாளப் படுத்துகிறார். இஸ்ரயேல் இப்படிப்பட்ட அனுபவங்களைப் பெறுவதற்குமுன் சபைவகுப்பார் பூரணப்பட்டு கடந்து விடுவார்கள். இதில் ரெபேக்காள் இல்லாததும் பொருத்தமாக உள்ளது.

ஆனால் இங்கு அவள் தாதி மரித்துப்போனாள். இவைகளுக்குமுன் அவளைப்பற்றி அறிவித்திருந்தாலும் அதாவது முதலில் ஈசாக்கிடம் செல்லுவதற்கான அழைப்பை ரெபேக்காள் பெற்றபோது, அவளுடைய தாதியைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தாலும் அவள் மரித்துப்போன பின்தான் அவளுடைய பெயர் குறிப்பிடப்பட்டது (ஆதியாகமம் 24:59). ஆகவே சபை அழைப்பு பெறுவதற்கு முன்னிருந்த முற்பிதாக்களை இந்தத் தெபோராள் அடையாளப்படுத்தக்கூடும். இக்கால யுகத்திலுள்ள விசுவாச வகுப்பாரைப் போஷித்து பராமரிக்கும், "திரளான சாட்சிகளாக" தாதியாக உதவியாளர்களாக இருக்கிறார்கள். எஸ்தரைப் போஷித்து வளர்த்த மொர்தெகாய், முற்பிதாக்களை அடையாளப் படுத்துவதைப்போல இவ்விடத்தில் ரெபேக்காளின் தாதி, வயதில் மூத்தவள் முற்பிதாக்களை அடையாளப்படுத்துகிறாள்.

இந்த இடத்தில் தெபோராளின் "மரணம்" ஆவிக்குரிய வகுப்பாருக்கு உதவியாளர்களாக இருந்த முற்பிதாக்களின் வேலைகள் முடிவடைவதாகக் கருதப்படுகிறது. அடைக்கலப்பட்டணத்தில் அந்தப் பிரதான ஆசாரியன் மரிக்கும்வரையில் அந்தக் குற்றவாளி அந்தப் பட்டணத்திற்குள் இருக்க வேண்டும் என்பதை மீண்டும் நினைவில்கொள்ளலாம். இக்காலத்து சுவிசேஷ யுகத்தில், இந்த யுகத்திற்கான வேலை முடிவடையும்வரையில், நம்முடைய பிரதான ஆசாரியனாகிய இயேசுவின் பாதுகாப்பின் கீழ் நாம் இருக்க வேண்டும் என்பதை இது அடையாளப்படுத்துகிறது – மேலும் ஆயிர வருட யுகத்தை நோக்கிச் செல்லும் இந்த உலகம் அவர்களுடைய பிரதான ஆசாரியனாகிய இயேசு, அந்த யுகத்தில் வேலைகளை நிறைவு செய்யும்வரையில் அவருடைய பாதுகாப்பில் இருக்க வேண்டும். இப்படியாக பிரதான ஆசாரியனுடைய "மரணம்" இயேசுவின் சொல்லர்த்தமான மரணத்தை இங்கு அடையாளப்படுத்துவதில்லை. மாறாக இந்த இரண்டு யுகங்களிலும், பிரதான ஆசாரியனின் பொறுப்புகள் நிறுத்தப்படுவதை இது அடையாளப்படுத்துகிறது. அதுபோல தெபோராளைப் பொறுத்தவரையில் இங்கும் அதே காரியம் அடையாளப்படுத்தப்படுகிறது. அவளுடைய மரணம், முற்பிதாக்களின் சொல்லர்த்தமான மரணத்தைக் குறிப்பிடாமல், சுவிசேஷ யுகத்தின் அழைப்பில் வந்தவர்களுக்குத் "தாதியாக" ஊழியம் செய்த அவர்களின் வேலை முடிவடைவதைக்குறிக்கும். பின்னர் ஆயிர வருட யுகத்தில் மனுக்குலத்திற்காக அடுத்த வேலைகளை முற்பிதாக்கள் நடைமுறைப்படுத்துவதற்கு காலமாக இருக்கும்.

**(5) பென்யமீன்:** ராகேல் யாக்கோபுக்கு, இரண்டாவது குமாரனாகிய பென்யமீனை பெற்றெடுப்பதற்கான காலம் வந்தது. பிள்ளைப்பெறும்போது ராகேல் மரித்து பெத்லெகேமிலுள்ள எப்பிராத்தாவுக்குச் செல்லும் வழியில் அவள் அடக்கம் பண்ணப்பட்டாள் (ஆதியாகமம் 35:19). பொதுவாக பென்னியமீனின் பிறப்பு, திரள்கூட்டத்தாரின் நிறைவை அடையாளப்படுத்தும் என்று சகோதரர்களால் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. அந்நேரத்தில் யோசேப்பையும் (இயேசு மற்றும் சபை), பென்யமீனையும் (திரள்கூட்டம்) வரவழைத்த ஆவிக்குரிய உடன்படிக்கை பிறப்பித்து, தன்னுடைய ஊழியத்தை நிறைவு செய்து கடந்து விடுகிறது (R4437:2).

**(6) ரூபன்:** ஆதியாகமம் 35:22-ஆம் வசனத்தில் நடந்த அடுத்த சம்பவத்தின்போது, ராகேல் உயிரோடிருப்பதற்கு வாய்ப்பில்லை. ரூபன் பில்க்காளிடத்தில் வரம்பு மீறி நடந்துகொண்டார். இவள் யாக்கோபின் வைப்பாட்டி என்று அழைக்கப்படுகிறாள். இவள் ராகேலின் வேலைக்காரியாகவும் இருந்தாள். ரூபன் பில்க்காளின் தலைச்சன் பிள்ளையாக இருந்தான். வம்ச வழியில் இவனே வாக்குத்தத்தங்களுக்கும் ஆசீர்வாதங் களுக்கும் முதன்மையான சுதந்திரவாளியாக

இருந்தான். இந்த அத்துமீறின செயலினால் இந்த அனைத்து சிறப்புரிமைகளையும் அவன் இழந்தான் (1 நாளாகமம் 5:1).

தொடரும் சம்பவத்தில், நாம் இப்போது சுவிசேஷ யுகத்தின் முடிவுக்குப்பின் இருக்கிறோம். பல கிறிஸ்தவர்கள் அப்போதும் அந்நாள்வரைக்கும் அவர்கள் தங்களைப் பக்தியோடு அர்ப்பணித்திருந்தால் ஆவிக்குரிய பரிசுகளைப்பெற வாய்ப்புகள் இருந்தும் எந்தவிதமான ஆவிக்குரிய பரிசுகளையும் பெறாமல் வாழந்துகொண்டிருப்பதை, இந்த அனுபவம் நமக்கு நினைப்பூட்டுகிறது. இவர்கள் அர்ப்பணிக்காத கிறிஸ்துவ விசுவாசிகள் எண்ணிக்கையில் பலராக இருப்பார்கள். இவர்கள் "தலைச்சன்களாக இருப்பதற்கான வாய்ப்பைப் பெற்றிருந்தும், அவர்கள் அதைப் பெற்றுக்கொள்ள தவறிவிட்டார்கள் - சேஷ்ட புத்திர வாய்ப்பைத் தக்கவைத்துக்கொள்ள தவறிய ரூபனுக்கு அடையாளப்படுத்தப்படுகிறது. குறிப்பிட்ட படி இவர்கள் ராகேலின் வேலைக்காரியாகிய பில்க்காளோடும் ராகேலோடும் தொடர்புடையவர்கள். ஆனால் இவர்கள் ராகேலுடைய பிள்ளைகள் அல்ல. இவர்கள் ஆபிரகாமின் உடன்படிக்கையின் ஆவிக்குரிய பகுதியாக இல்லாதவர்கள் என்று இது குறிப்பிடுகிறது. இந்தக் கிறிஸ்தவர்கள், தங்களுடைய அர்ப்பணிப்பில் "தண்ணீரைப்போல ததும்பினவர்கள்," மேன்மையடையமாட்டார்கள் (ஆதியாகமம் 49:4). இவர்கள் இராஜ்யத்தில் ஜீவனைப்பெறுவார்கள். ஆனால் இவர்கள் பரலோக ஆளுகையின் எல்லை இல்லா அற்புதங்களை இழந்து விடுவார்கள்.

ரூபனுடைய இந்த அத்துமீறுதலுக்கு எந்தப் பலனும் இருக்கவில்லை. ஆயினும், பில்க்காள் யாக்கோபுக்கு தாண் மற்றும் நப்தலி என்ற இரண்டு குமாரர்களைப் பெற்றாள். பில்க்காள் ஆவிக்குரிய உடன்படிக்கை அல்ல, ராகேல் மட்டுமே ஆவிக்குரிய உடன்படிக்கையாக இருந்தாள். ஆயினும் பில்க்காள் ஒரு வேலைக்காரியாக தொடர்புடையவளாக இருந்தாள். தாண், சபையையோ அல்லது திரள் கூட்டத்தாரையோ அடையாளப்படுத்துவதில்லை. பரலோக அழைப்பை ஒருமுறை தழுவி அனைத்தும், பின்வாங்கிப்போனவர்களை தாண் அடையாளப்படுத்துகிறான். ஆகவே, வெளிப்படுத்தல் 7-ஆம் அதிகாரத்தில் வரிசைப்படுத்தப்பட்ட ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் மத்தியில் தாண் காணப்படுவதில்லை ஆதியாகமம் 49:16, 17-ஆம் வசனங்கள், தாண் விக்கிரக ஆராதனை செய்யக்கூடிய ஒரு தீங்கான தாக்கத்தைக் கோத்திரங்கள் மத்தியில் ஏற்படுத்தினான் என்று விவரிக்கப்படுகிறது. சொல்லர்த்தமாகவும் தாண் கோத்திரம் முழுமையாக விக்கிரக ஆராதனைக்குள் சென்றது என்று நியாயாதிபதி 18-ஆம் அதிகாரத்தில் மறுபடியும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆவிக்குரிய விதத்தில், ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் மத்தியில், விழுந்துபோகும் வகுப்பாரை தாண் கோத்திரம் நிறைவு செய்கிறது.

பில்க்காளின் இரண்டாவது குமாரன் நப்தலி என்பதற்கு, "போராட்டம்" என்று பொருள் (ஆதியாகமம் 30:8). தூதனோடு போராடிய யாக்கோபை இது நம்முடைய நினைவுக்குக் கொண்டுவருகிறது. இவர்களின் தொடர்பு ராகேலின் வேலைக்காரியுடன் இருந்ததினிமித்தம், பரலோக வாய்ப்போடு தொடர்பு பெற்றிருந்த இஸ்ரயேலரை இந்த நப்தலி அடையாளப்படுத்தக்கூடும் என்று கருதப்படுகிறது. ஆனால், மேசியாவின் முதல் வருகையில் அவரை ஏற்றுக்கொள்ள இஸ்ரயேலர்கள் தவறின காரணத்தினால், அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஆவிக்குரிய வாய்ப்புகளையும் பெற்றுக்கொள்ள தவறிவிட்டார்கள். ஆயிர வருட துவக்கத்தில் நடைபெறும் உபத்திரவ காலத்தில் இவர்கள் "போராடி" இராஜ்யத்தில் ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட பங்கைப்பெறுவார்கள். ஆனால் அவர்கள் பூமிக்குரியவர்களாக இருப்பார்கள்.

இந்த விஷயத்தில் ராகேலின் பிள்ளைகள் மற்றும் வேலைக்காரியாகிய பில்காளின் பிள்ளைகள் சுவிசேஷ யுக அழைப்பிற்கு, ஏதோ ஒரு வழியில் சம்பந்தப்பட்ட விஷேித்த வகுப்பாரை குறிப்பிடப்படுகிறார்கள். இதற்கு எதிரிடையாக, லேயாள், எப்போதும் பூமிக்குரியவர்களாக இருப்பவர்களைக் குறிப்பிடுகிறார்கள் லேயாளின் ஆறு குமாரர்கள், நமக்கு கேத்தூராளின் ஆறு குமாரர்களை நினைவுக்குக்கொண்டுவருகிறார்கள். இவர்கள் உலகத்தில் பிறந்த மனுக்குலத்தை அடையாளப்படுத்துகிறார்கள். இவர்கள் 6000

வருடங்களாக, வீழ்ச்சியின் தாக்கத்தில் உருவாக்கப் பட்டார்கள்.

லேயாளின் வேலைக்காரி சில்ப்பாள் ஒருவேளை திரும்பக்கொடுத்தலின் இரண்டு பெருங்கூட்டத்தை உருவகப்படுத்தலாம். சில்ப்பாளின் மூத்தக் குமாரன் "காத்" இதற்கு "ஏராளம்" என்று பொருள் (ஆதியாகமம் 30:11). அவளுடைய இரண்டாம் குமாரனான ஆசேர். அதற்கு "மகிழ்ச்சி" என்று பொருள் (ஆதியாகமம் 30:13). இவர்கள் பூமிக்குரிய அழைப்பின் இரண்டு கோணங்களை விவரிக்கிறார்கள் - இவர்கள் திரளானவர்கள், மற்றும் நம்முடைய அன்பான தேவனால் வெளிப்படும் ஆசீர்வாதங்களினால் மகிழ்ச்சி அடையக்கூடியவர்கள். ஆவிக்குரிய வகுப்பை அடையாளப்படுத்தும் ஈசாக்கு என்ற நாமத்துக்கு "நகைப்பு" என்று பொருள். இது இன்றும் உயர்வான மகிழ்ச்சியை அடையாளப்படுத்தும். ஆனால் இந்த உலகமும் மகிழ்ச்சியினால் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள்.

**(7) ஈசாக்கு:** ஆதியாகமம் 35-ஆம் அதிகாரத்தில், இறுதியான அத்தியாயம் ஈசாக்கின் மறைவு. இந்தக் கட்டத்தில் சுவிசேஷ யுகத்தின் எல்லா காரியங்களும் நிறைவடைந்துவிடும். மேலும் பரலோக வகுப்பாரின் அழைப்புக்கான இயேசுவின் ஊழியம் முடிந்துவிடும். ஈசாக்கு 180 வயதில் மரித்தார் என்று குறிப்பிடுகிறது (ஆதியாகமம் 35:28). அதாவது 18ஐ-10 மடங்காகப் பெறுக்குதல் ($18x10^1 = 180$) எண் 18-உடனான, ஈசாக்கின் இந்த இணைப்பு, பரம அழைப்பு புறஜாதி உலகிற்கு, பிரதானமாக உள்ளது என்கிற உண்மையைப் பிரதிபலிக்கிறது. ($10^1$ = 10 to the power 1) 18 என்ற எண் புதிய ஏற்பாட்டில் இரண்டு முறைகள் காணப்படுகிறது. இவைகள் ஒரே அதிகாரத்தில் காணப்படுகிறது (லூக்கா 13). இந்த முழு உலக மனுக்குலமும் சாபத்திற்குள் இருப்பதை, சீலோவாமில் கோபுரம் இடிந்து விழுந்ததை 18 பேர் மரித்துப் போனதை, இயேசு ஒரு வரைபடமாகப் பயன்படுத்திக் காட்டினார். வெகுசில வசனங்களுக்குப் பின் "18 வருஷமாக பிசாசு பிடித்திருந்த ஒரு ஸ்திரீயை" இயேசு குணமாக்கினார் (லூக்கா 13:16). கிறிஸ்துவுக்குள் உருவாவதற்காக சாத்தானின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டவர்களை இவள் அடையாளப் படுத்துகிறாள். அதுபோல பன்னிரண்டு என்ற எண், யூத பின்னணியிலிருந்த அழைக்கப்பட்ட பரிசுத்தவான்களைக் குறிப்பிடுகின்றது. லூக்கா 8-ஆம் அதிகாரத்தில் இயேசு, 12 வருஷம் பெரும்பாடுள்ள ஸ்திரீயைக் குணப்படுத்தினார் (லூக்கா 8:43). மேலும், சில வசனங்களுக்குப் பின் 12 வயது சிறுமியை இயேசு உயிரோடு எழுப்பினார் (லூக்கா 8:42). இந்த இரண்டுமே, இயேசுவின் சொஸ்தமாக்கும் தொடுதலை விரும்பி ஏற்றுக்கொண்ட யூத ஜனங்களை அடையாளப்படுத்துகிறார்கள்.

**ச**பை யூதர்களிலிருந்து கூட்டிச் சேர்க்கப்பட்டது (12) மற்றும் புறஜாதிகளிலிருந்து (18) கூட்டிச் சேர்க்கப்பட்டது. இவர்கள் கிறிஸ்துவுக்குள் (எபேசியர் 2:15) ஒரே சரீரமாக இணைக்கப்படுகிறார்கள். சாலொமோன் ஆலயத்தின் இரண்டு தூண்களும் இவைகளையே அடையாளப்படுத்தக்கூடும். இவைகளின் அளவு, 12 முழம் சுற்றளவும், 18 முழம் உயரமுமாக இருந்தது. இப்படியாக இந்த இரண்டுப் பகுதிகளும் கிறிஸ்துவின் சரீரத்திற்கு உட்பட்டவைகள் என்று காணப்படுகிறது (1 இராஜாக்கள் 7:15. See also “DoubleNumbers,” Beauties of the Truth, May 2009).

ஈசாக்கு மரித்தப்பின் மணவாட்டி சபையை வருந்தி அழைக்கக்கூடிய வேலை மற்றும் அதற்கு சம்பந்தப்பட்ட மீதியுள்ள சகலவிதமான முயற்சிகளும் முடிவடைந்துவிடும். 2000 வருடங்களுக்கு மேற்பட்ட உழைப்பு முடிவடையும். கிறிஸ்தவ மண்டலத்தின் வல்லமைகள் கவிழ்க்கப்படும். திரள்கூட்டத்தார்கள் அனைவரும் வீட்டில் குடியேறுவார்கள். இஸ்ரயேல் மனம் வருந்தியிருக்கும், இயேசுவை ஏற்றுக் கொண்டிருக்கும் தங்களுடைய எதிரிகளிடமிருந்து மீட்கப்பட்டு, முற்பிதாக்களின் தலைமையை ஏற்றுக் கொண்டிருப்பார்கள். இந்த உலகத்தில் ஒரு புதிய யுகம் துவங்கியிருக்கும்.

ரோம சட்டத்தின் கோட்பாடு

# பெஸ்துவின் நீதி

"ஒளியின் பிள்ளைகளைப்பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள்" (லூக்கா 16:8).

**Carl Hagensick**

ரோம சட்டமே இன்றைய சட்ட அமைப்பின் அஸ்திபாரம் என்று கருதப்படுகிறது. கிபி 449-இல் உருவான "பன்னிரண்டு அட்டவணைகளின்" சட்டத்திலிருந்து ஆரம்பித்து, ஜஸ்டின்னியன் குறியீட்டில் தான், (ஏறத்தாழ கிபி 530) ரோமன் சட்டமைப்பு மெதுவாக இறுதி சட்டத்தொகுப்பாக உருவானது. [மே 2008 ஹெரால்டில் முதன் முதலில் வெளியான, இக்கட்டுரையானது, இன்னும் ஆன் லைனில் கிடைக்கும் ஒரு சொற்பொழிவை அடிப்படையாகக் கொண்டது (Google "Festus Hagensick," என்று கூகுளில் தேடும் போது பட்டியலில் முதலாகத் தோன்றும்) "சகோ. கார்ல்" ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பே நம்மை விட்டுப் போயிருந்தாலும் இன்றும் பரவலாக அறியப்படுகிறவர், நம் ஐக்கியத்திலும் மற்றும் நம்முடைய அன்றாட வாழ்வில் பொதுவாக செயல்முறைப்படுத்தும் பண்புக்கூறுகளை வேதாகம கதைகளிலிருந்து எடுத்துக் கூறும் தனித்திறமை உடையவர், குறிப்பாக, நமது உத்வேகம், நம்முடைய உள்நோக்கங்கள், மற்றும் நமது அறிவுக்கேற்ற அணுகுமுறைகள், சகோதரர்கள் மத்தியில் (அ) இடையே எழும் விஷயங்கள்பற்றி சோதித்துப்பார்ப்பதற்கு, பெஸ்து பற்றிய அவரின் பாடம் ஏற்புடையதாய் உள்ளது. அவர் வலியுறுத்திய ஞானம் செயல்படுத்தப்பட்டால், நம்முடைய ஐக்கியம் மேலும் ஒற்றுமையாக இருக்கும். அவரது நினைவாகவும், மற்றும் கிறிஸ்தவ கொள்கைகளை மேன்மை பாராட்டும்விதமாகவும், நாமும், இப்பாடத்தினை மனதில் நிறுத்தி மற்றும் எந்தெந்தப் பகுதிகளில் நாம் எங்கு (அ) எவ்வாறு மேம்படுத்த வேண்டுமென்பதைக் கருத்தில்கொள்ள வேண்டும் - பதிப்பாசிரியர்.]

இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் வாழ்ந்த காலத்தில் நியமிக்கப்பட்ட நியாயாதிபதிகளினாலும் அல்லது ஆட்சி தலைமையினாலும் இது ஒரு முழு வளர்ச்சியடைந்து சட்டப்பூர்வமான அமைப்பாக, நிர்வகித்தார்கள். பேலிக்ஸ் மற்றும் பெஸ்து இந்த இருவருமே அப்போஸ்தலனாகிய பவுலின் விசாரணையில் முக்கியமான தேசாதிபதிகளாக இருந்தார்கள்.

பெலிக்ஸ் மற்றும் பெஸ்து, இவ்விருவரும் குறிப்பிட்ட வேறுபட்ட குணாதிசயங்கள் உடையவர்களாக இருந்தனர். பெலிக்ஸ் கைக்கூலி வாங்கினவரும் (அப்போஸ்தலர் 24:26) பெஸ்து நாணயம் உள்ளவராகவும் காணப்பட்டார். பெஸ்துவுக்கு சாதகமாக பேலிக்ஸ் பணி நீக்கம் செய்யப்பட்ட போது, இந்த இரண்டு ரோம ஆளுநர்களும் தங்களை ஒரு சீர்கேடான சூழ்நிலையில் கண்டார்கள்.

அக்காலத்தில் யூதேயாவுக்கு ஏரோது அக்கிரிப்பா 2 இராஜாவாக இருந்தார். இவர் தன்னுடைய பாட்டியாகிய மரியாமனி (Mariamne) வம்சவழியான யூத ஹாஸ்மோனியன் (Hasmonean) அரமனையில் வசித்து வந்தார். இதில் ஆலய வளாகமும் இணைந்திருந்தது. ஆலய பிரகாரங்களுக்குள் காணும்படியாக, அவருடைய அரமனையின் சுவருகளை உயரமாகக் கட்டியிருந்தார். அவருடைய பார்வையை தடுக்கும்படி உயரமான சுவர்களைக் கட்டின ஆசாரியர்கள் மிகுதியாகக் குற்றஞ்சாட்டப்பட்டனர். இவர்கள் ரோமாபுரியையும் எதிர்த்து, சீசரிடமிருந்து ஒரு சாதகமான பதிலை பெற்றுக்கொண்டனர். இந்தக் காரணத்தினால் பெஸ்து மற்றும் பெலிக்ஸ் இருவருமே யூதர்களுக்குக் கடன்பட்டவர்களாக எண்ணினார்கள் (அப்போஸ்தலர் 24:27; 25:9). மேலும் இதன் காரணத்தினால், பேலிக்ஸ் பொறுப்புகளிலிருந்து நீக்கப்பட்டிருக்க வேண்டும்.

காரியங்களைச் சரிசெய்வதில் பெஸ்து காலம் தாமதிக்கவில்லை. இஸ்ரயேலுக்கு வந்தபின் மூன்றே நாட்களில், அவர் பிரதான யூத மத குருக்களைச் சந்திக்க செசரியாவிலிருந்து எருசலேமுக்குச் சென்றார். ஒருவேளை ரோமர்கள் யூதர்களுக்கு வருத்தம் உண்டாக்கினதால், அந்தப் பிரதான ஆசாரியர் உடனடியாக பெஸ்துவின் விண்ணப்பத்தை

ஏற்றுக்கொண்டார்போல் தோன்றுகிறது. ஆகவே அவர் கேட்பதைக் கொடுப்பதற்கு மனப்பூர்வமாக சம்மதித்திருக்க வேண்டும்.

பவுல், யூதப் பிரமாணத்தின்படி குற்றஞ்செய்தார் என்பதால் அவரை எருசலேமுக்குப் போகும்படி அவர் கூறினார். இந்த விண்ணப்பத்திற்குப் பின்னால், அப்போஸ்தலரை வழியில் கொன்றுபோடும்படிக்கு, ஒரு கொடிய திட்டம் தீட்டப்பட்டிருந்தது. அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்குவதற்குப்பதிலாக, இந்த விஷயத்தை சிசேராவில் விசாரணைச் செய்வதாக அந்த ரோம ஆளுநர் யூதர்களுக்கு உறுதியளித்தார்.

கடல் ஓரமாக நின்ற கோட்டைக்கு திரும்பியபோது, உடனடியாக பெஸ்து அந்தக் கைதியை தனக்கு முன் ஆஜர் ஆகும்படி அழைத்தனுப்பினான். அவர் முதலில் செசராவுக்கு வந்திருந்த யூதர்களின் குற்றச்சாட்டைக் கேட்டார். ரோமர்கள் மற்றும் யூதர்களின் சட்டத்திற்கு விரோதமாக தான் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்று பவுல் மன்றாடினார்.

பெஸ்து யூதர்களுக்கு ஒரு அநுகூலம் செய்ய விரும்பி, விசாரணைக்கு எருசலேமுக்குப்போக விருப்பமா என்று பவுலிடம் கேட்டார். பவுல், தன்னுடைய ரோம குடியுரிமையினால் மன்றாடி, சீசரின் உயர் அதிகாரமுள்ள நீதிமன்றத்தில் விசாரிக்கும்படி வேண்டிக்கொண்டார்.

## குற்றஞ்சாட்டுபவரை எதிர்த்து நிற்கும் உரிமை

அகிரிப்பா இராஜா வந்தபோது, அந்த அதிகாரி, ஒரு அடிப்படையான ரோம சட்ட கொள்கையைக் குறிப்பிட்டு, அந்தக் காரியத்தை முன் வைத்தார். "அவர்களுக்கு நான் பிரதியுத்தரமாக குற்றஞ்சாட்டப்பட்ட மனுஷன் குற்றஞ்சாட்டினவர்களுக்கு முகமுகமாகய்நின்று, சாட்டின குற்றத்துக்குத் தனக்காக எதிருத்தரவு சொல்ல அவனுக்கு இடங்கிடைக்கிறதற்குமுன்னே, குற்றஞ்சாட்டினவர்கள் பட்சமாய் அவனை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கிறது ரோமருக்கு வழக்கமல்ல என்றேன் " (அப்போஸ்தலர் 25:16).

மூன்று கொள்கைகளில் ஒன்றான இந்தக் கொள்கையை பவுலின் விசாரணையில், பெஸ்து பயன்படுத்தினார். நவீன பிரமாணத்திற்கு ஒரு சட்டப்பூர்வமான உத்திரவாதமாக இது தொடர்ந்து நீடித்திருக்கிறது. குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் இரண்டு அடிப்படை உரிமைகளை இது உறுதிப் படுத்துகிறது; எதிர்த்துரைப்பதற்கான உரிமை மற்றும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்தல் மற்றும் கேட்டுணர்ந்த செய்திகளை சாட்சியாக எடுத்துக்கொள்வதைத் தவிர்ப்பதாகும்.

சமுதாயத்திற்குரிய வழக்குகளிலும் இந்த இரண்டு உத்திரவாதங்கள் மிகச் சரியானதாக மட்டுமல்ல, நீதியானதுமாகவும் உள்ளது. சபைகளுக்குள் இருக்கும் பிரச்சனைகளுக்கும் இது பொருந்தும். இவைகள் இயேசு தம்முடைய சீஷர்களுக்கு முன் வைத்த வழிகளில் ஒரு சரியான முறையாகும். "உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய். அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ. அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதை சபைக்குத் தெரியப்படுத்து; சபைக்கும் செவிகொடாதிருப்பானானால் அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக" (மத்தேயு 18:15-17).

இந்த வேத பகுதியில், இயேசு குற்றவாளியின் இரண்டு உரிமைகளைப் பாதுகாப்பதோடு மட்டுமல்ல, கூடுதலாக இதைத் தனிமையில் செய்வதற்கு அறிவுருத்தினார். இப்படியாக நற்பெயரையும் பாதுகாத்தார்.

முதல்படியாக குற்றஞ்சுமத்துபவர், குற்றங்கண்டுபிடித்தவரை தனிமையில் அணுக வேண்டும். ஒருவரையொருவர் சந்திப்பதினால் இந்தப் பிரச்சனை தீர்க்கப்படும் என்று நம்பலாம். வெவ்வேறு கோணங்களில் வெளிச்சம் வீசப்படுவதினால் தவறான புரிந்துகொள்ளுதலை முற்றிலுமாக தெளிவுப்படுத்த வேண்டும். குற்றவாளியும் குற்றஞ்சாட்டுபவரும், திறந்த மனதோடு ஒவ்வொருவருடைய கோணங்களையும் புரிந்துகொள்வதற்கு

மனப்பூர்வமாக சம்மதித்தால் மட்டுமே இந்தப் படிநிலை பயனுள்ளதாக இருக்கக்கூடும்.

வழக்கமாக மற்றவரின் செயல்களினால் ஒருவர் வருத்தமடைவாராயின், வலிமையான உணர்வுகள் வளரும்வரை; இவ்வகையான அணுகுமுறையில் தாமதம் ஏற்படும். இது முரண்பாடுகளில் பதற்றத்தை ஏற்படுத்தும். மற்றும் கடினமான உரத்த மொழியைப் பயன்படுத்தச் செய்யும். இந்தவகையில் இது குற்றம் சாட்டப்பட்டவரை அதிகம் கோபமடையச்செய்து மற்றும் அதிகமாக தன்னை நியாயப்படுத்தச் செய்யும். "மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ் சொற்களோ கோபத்தை எழுப்பும்" (நீதிமொழிகள் 15:1) என்ற வசனத்தைக் குற்றஞ்சுமத்துபவர்கள் நினைவில்கொள்வது ஞானமாக இருக்கும்,

அதுபோல குற்றஞ்சுமத்தப்பட்டவர் தாவீது. சீமேயுவினால் கல்லெறியப்பட்டு சபிக்கப்பட்டபோது, அவர் சொன்ன வார்த்தைகளை அவசியமாக நினைவில்கொள்ள வேண்டும். "அவன் என்னைத் தூஷிக்கட்டும்; தாவீதைத் தூஷிக்க வேண்டும் என்று கர்த்தர் அவனுக்குச் சொன்னார்" (2 சாமுயேல் 16:10). மதிக்கூர்மையோடு குற்றம் சாட்டுபவர்களுக்கு, பதில் சொல்வதைக்காட்டிலும் ஞானமுள்ள கிறிஸ்தவர் திருத்தங்களைத் தேடி உணருவது மிக அவசியமாக உள்ளது. "சிநேகிதன் அடிக்கும் அடிகள் உண்மையானவைகள்" (நீதிமொழிகள் 27:6).

## திறமை வாய்ந்த சாட்சிகள்

பெஸ்து குழப்பமடைந்தார். எருசலேமின் ஆசாரியர்களுடைய குற்றச்சாட்டை அவர் கேட்டார். ரோம சட்டத்தை நன்கு பழக்கப்படுத்தனவர் எபிரெய நுட்பமான வழக்கங்களின், அதிகமாக பரிச்சயம் இல்லாதிருந்தார். சில குடிமக்களின் சக்தியினால் குற்றம் சாட்டப்பட்ட நிலையில் இராயனுக்கு அபயமிட்ட ஒரு ரோம குடிமகனை எதிர்கொள்ள, அவருக்கு நேரிட்ட பிரச்சனையில் உதவிச்செய்ய விரும்புகின்றார். அவர் சொந்தமாக முடிவெடுத்தார். "நீ இராயருக்கு அபயமிட்டாயே; இராயரிடத்திற்கே போகக்கடவாயென்று உத்தரவு சொன்னான்" (அப்போஸ்தலர் 25:12). இப்போது, ஒரு கைதிக்கு எதிராகக் குற்றச் சாட்டுகளைக் குறிப்பிட நேரிடுகிறது. எபிரேய வழக்கங்களில் பழக்கமில்லாத அவளுக்கு எதுவும் புரியவில்லை.

பெஸ்து இந்தக் காரியத்தைக்குறித்து யோசித்துக்கொண்டிருந்தபோது, ரோமரால் நியமிக்கப்பட்ட யூதேயா ஆளுநர் ஏரோது அகிரிப்பா மற்றும் பெர்னீக்கேயாளும் புதிய குடியேற்ற நாட்டின் ஆளுநரை வரவேற்பதற்கு செசராவுக்கு வந்தார்கள். பெஸ்துவுக்கு அது எதிர்பாராமல் நிகழ்ந்தது. "அகிரிப்பாவும் அவருடைய மனைவியும் எபிரேய விசுவாசத்தை ஏற்றுக்கொண்டதினாலும், பெஸ்துவுக்கு இதில் குறைவான அறிவைப் பெற்றிருந்ததினாலும், அவர்கள் வந்த சூழ்நிலையை சாதகமாக்கிக்கொண்டு, பவுலுக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றங்களை விசாரிப்பதற்கு அவர்களுடைய உதவியை நாடினார். இல்லாவிட்டால் யூத கோணத்திலிருந்து இவைகளை ஒருவரும் புரிந்துகொள்ள முடியாததாக இருந்தது (R4501).

பெர்னீக்கேயாள் ஒரு உறுதியற்ற நிலையில் காணப்பட்டார். இவர் அகிரிப்பாவின் சகோதரியாக இருந்தாள். இவள் கால்சிஸ்சின் இராஜாவாகிய ஏரோதாகிய அவருடைய மாமாவைத் திருமணம் செய்தவள். அவர் மரித்துப்போனபின், அவருடைய சகோதரனுடன் வாழ்ந்தாள். அகரிப்பாவும் மற்றும் பெர்னீக்கேயாளும் தகாத உறவைக் கொண்டிருந்தார்கள் என்றும் யூத வரலாற்று ஆசிரியர் ஜோசபஸ் மற்றும் ரோம கவிஞர் குறிப்பிடுகிறார்கள். இவள் தீத்து சக்கரவர்த்தியின் கள்ள காதலியுமாகவும் இருந்தாள் என்று வரலாறு ஆசிரியர் Tacitus கூறுகிறார். அகிரிப்பா மற்றும் பெர்னீக்கேயாள் சிறந்த சாட்சிகளாகக் கருதப்படுகிறார்கள். ஏனெனில் ஒவ்வொருவரும் யூத வழக்கத்தில் கற்று உணர்ந்தவர்களாகவும் ரோமாபுரியில் நம்பிக்கைக்குரியவர்களாகவும் இருந்தனர். பவுலை மறு விசாரணை செய்வது அகிரிப்பாவின் நோக்கமாக இருக்க வில்லை, மாறாக குற்றச்சாட்டுகளை முறைப்படுத்தி ரோமுக்கு அனுப்புவதே யோசனையாக இருந்தது.

பவுலின் வாதவிளக்கம் நாவன்மையாக இருந்தது. ஒரு யூதனாகவும், ஒரு பரிசேயனாகவும் பவுல் தன்னுடைய நம்பிக்கையூட்டுவதற்குரிய ஆதாரச் சான்றுடன் பேசத்துவங்கினார். அவருக்கு யூத மதத்தின் மேலுள்ள ஆர்வத்தையும், கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தின அவருடைய

வேலைகளையும் கூறி, தன்னுடைய பேச்சைத் தொடர்ந்தார். அதற்குப்பின் அவருடைய மனமாற்றத்தைப்பற்றியும், பரத்திலிருந்து காண்பிக்கப்பட்ட தரிசனத்தை எவ்வளவாகக் கீழ்ப்படிவதற்கான பொறுப்பைப் பெற்றிருந்தார் என்றும் விவரித்தார்.

பெஸ்து இடைமறித்து அதிகக் கல்வியினால் அவருக்கு பைத்தியமுண்டாயிற்று என்று கூறும் பொழுது, பவுல் நேரிடையாக அகிரிப்பாவின் வெளிப்படையாக புலப்படும் யூத நம்பிக்கைக்கு அபயமிடுகிறார். "அகிரிப்பா இராஜாவே, தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறீரா? விசுவாசிக்கிறீர் என்று அறிவேன் என்றான். அப்பொழுது அகிரிப்பா பவுலை நோக்கி: நாந் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய் என்றான்" (அப்போஸ்தலர் 26:27, 28). இந்தத் தாக்கம் மிக அருமையாக பாஸ்டர் ரஸலினால் காண்பிக்கப்பட்டுள்ளது. "அவருடைய சிந்தைக்கு முன் இந்தக் கருத்துக்கள் கடந்து சென்றிருந்தாலும், அது அகிரிப்பாவை ஒரு பரிசுத்தவானாக மாற்றவில்லை. ஆயினும், அவருடைய சொந்த வீழ்ச்சியைப் புரிந்துகொள்வதற்கு, வழிநடத்திய செய்திகளை அவர் கேட்கும்படி செய்தது. பரிசுத்தவானாகிய பவுல் நன்மையைச் செய்ததால் துன்பப்பட்டுக்கொண்டிருந்தார் என்பதையும், தான் (அகிரிப்பா) தவறு செய்ததால் துன்பப்படுவதையும் அவர் கண்டார். அவர் தேவனை நீதியுள்ள தேவன் என்று கண்டார்" (R4993).

வழக்கு கேள்வி முறையைத் தொடர்ந்து, பவுல் நிராபராதி என்பதை தனிப்பட்ட முறையில் பெஸ்துவும் அகிரிப்பாவும் அறிந்திருந்தும், ரோமாவிலுள்ள இராயரின் நீதிமன்றத்திற்கு பவுலை அனுப்புவதற்கு அவரை இணங்க வைத்ததைத்தவிர அவர்களுக்கு வேறெந்த வழியும் இல்லாதிருந்தது.

"இது தான் நாங்கள் எப்பொழுதும் செய்வது (அ) எப்பொழுதும் நம்புவது" என்று எதிர்த்துரைப்பது, கிறிஸ்தவ விவாதங்களில், ஒரு பாடத்தில் தம்மைவிட அதிக ஞானம் வாய்ந்தவர்களிடத்தில் கலந்தாய்வு ஆலோசனை செய்ய முற்படுகையில் அடிக்கடி நிகழும் வருந்தத்தக்க விஷயமாகும்.

கலந்துரையாடலோ அல்லது உண்மையை கேட்டறிவதற்கோ மிகக் கடினமான ஒன்றாகும். சிலர் வேறுப்பட்ட அதிகமான படித்த தொலை நோக்கைப் பெற்றிருப்பார்கள். ஆனால் இந்தப் படிநிலையை செயலாற்றும்போது மத்தேயு 18-ஆம் அதிகாரத்தில் இரண்டாவது படியில் காண்பிக்கப்பட்டபடி அவருடைய வார்த்தைகள் கிரியைகள் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டிருக்கலாம் என்ற காரணத்தினாலேயே நடத்தப்படும் கலந்துரையாடல் குற்றம் சாட்டப்பட்டவரின் முன்னிலையில் நடத்தப்பட வேண்டியது மிக அவசியம். "காரியத்தைக் கேட்குமுன் உத்தரம் சொல்லுகிறவனுக்கு, அது புத்தியீனமும் வெட்கமுமாயிருக்கும்" (நீதிமொழிகள் 18:13).

### குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள்

"இவனை விசாரித்துக் கேட்டபின்பு எழுதத்தக்க விசேஷம் ஏதாகிலும் எனக்கு விளங்கும்படி, இவனை உங்களுக்கு முன்பாகவும், விசேஷமாய் அகிரிப்பா இராஜாவே, உமக்கு முன்பாகவும் கொண்டுவந்தேன்" (அப்போஸ்தலர் 25:27) என்ற பெஸ்துவின் வார்த்தைகளில் ரோம சட்டத்தின் மூன்றாவது அம்சத்திலிருந்து கிறிஸ்தவர்கள் பல விலையேறப்பெற்ற பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்.

அடிக்கடி, எந்தக் குறிப்பிட்ட தவறுகள் காணப்படாதிருந்தும் அவள் மோசம் என்று ஒரு சக மனிதருக்கு எதிராக ஒரு குற்றச்சாட்டு சுமத்தப்படுவதுண்டு. அல்லது மாறாக, தெளிவற்ற ஒரு குற்றச் சாட்டை உருவாக்கி, அதாவது குற்றஞ்சுமத்தப்பட்டவருக்கே ஏன் நாம் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளோம் என்கிற குழப்பத்தை ஏற்படுத்தும். அந்த விஷயத்தில் மிகவும் நாகரீகமான நாடுகளிலேயே சிறந்த சட்டமான ரோமானிய சட்டம், நடந்துள்ள குற்றங்கள் என்று கூறப்படுபவைகளை தெளிவாகக் குறிப்பிடப்படாமல் ஒரு வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அனுமதிக்காது.

இப்படிப்பட்ட சரியான நடைமுறைக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டை, யோபை கடிந்துகொண்ட இளைஞனாகிய எலிகூவின் முகப்புறையில் காணலாம்

(யோபு 33:3-12). சரியான ஆய்வுகளை கொடுப்பதற்கு எலிகூ எட்டு கொள்கைகளைப் பயன்படுத்தினார்.

(1) சரியான நோக்கம். "என் வார்த்தைகள் என் இருதயத்தின் உண்மைக்கு ஒத்திருக்கும்" (வசனம்3).

(2) தெளிவு அல்லது துவக்கம். "நான் அறிந்ததை என் உதடுகள் சுத்தமாய் வசனிக்கும்" (வசனம் 3)

(3) எதிர்த்துரையை வரவேற்றல். "உம்மாலே கூடுமானால் எனக்கு மறுமொழி கொடும் நீர் ஆயத்தப்பட்டு எனக்கு எதிராக நில்லும்" (வசனம் 5).

(4) வாதாடுவதற்கு அல்லது குற்றங்கான வரவழைப்பதற்குக் காத்திருத்தல். விமர்ச்சிக்க அழைக்கும் முன்மொழிதலுக்காகக் காத்திருத்தல் "இதோ, உம்மைப்போல நானும் தேவனால் உண்டானவன்" (வசனம் 6).

(5) ஒருவருடைய சொந்த பெலவீனத்தை ஒப்புக்கொள்ளுதல். "நானும் மண்ணினால் உருவாக்கப்பட்டவன்" (வசனம் 6)

(6) மென்மையாகப் பேசுதல் "இதோ, நீர் எனக்குப் பயப்பட்டுக் கலங்கத் தேவையில்லை; என் கை உம்மேல் பாரமாயிருக்கமாட்டாது" (வசனம் 7)

(7) கேள்விப்பட்ட தகவல்களை ஆதாரமாக ஏற்றுக்கொள்ளாதது "நான் காதாரக் கேட்க நீர் சொன்னதும், எனக்குக் கேள்வியான உம்முடைய வார்த்தைகளின் சத்தமும் என்னவென்றால் . . . " (வசனம் 8-11)

(8) மனுஷரையல்ல கிரியைகளைக் குறைக்கூறுதல் "இதிலே நீர் நீதியுள்ளவர் அல்லவென்று உமக்குப் பிரதியுத்தரமாகச் சொல்லுகிறேன்" (வசனம் 12).

இப்படிப்பட்ட கவனமுள்ளவைகளை தேவனுடைய சகல ஜனங்களும் பயன்படுத்தினால், தேவையான கடிந்துகொள்ளுதல்களைக் கொடுக் கும்போது குறைவான உராய்வு (பண்பு முரண்பாடு) ஏற்படும். விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் சில நேரங்களில் கடிந்துரைக்க வேண்டும். இப்படிப்பட்ட ஒரு கட்டளை அப்போஸ்தலனாகிய பவுலினால் 2 தீமோத்தேயு 4:2-இல் கொடுக்கப்பட்டது. "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு" இந்த அறிவுரை எப்படியாவது அன்போடு சத்தியத்தைப் பேச வேண்டுமென்று நம்மை உற்சாகப்படுத்தும் எபேசியர்களைப் போலசெய்ய வேண்டும் (எபேசியர் 4:15).

ரோம சட்டரீதியான கோட்பாடுகளில் இரக்கம் அதேசமயம் நேரடியாக இருப்பது என்பது, மற்றொருவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளைக் குறிப்பிடுவதில் ஒரு வழியாகும். யாரேனும் தவறு செய்கிறார்கள் என்று உணரும்போது, இவ்வகையான அணுகுமுறையைப் பயன்படுத்துவது எவ்வளவு முக்கிமாக எண்ணுகிறோமோ, அதேசமயம், மற்றவர்கள் மீது இவ்வாறான குற்றச்சாட்டுகளை வைக்கும் போது எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும் என்கிற எச்சரிப்பு எவ்வளவு அதிகமாய் தேவைப்படுகிறது.

இந்தக் கட்டுரையின் தலைப்பாகிய நம்முடைய வேதப்பகுதி, ஒரு வேறுபட்ட சூழ்நிலையில் உள்ளது. குறைகூறுவது அல்லது மற்றவர்களைத் திருத்துவதுபோன்ற காரியங்களுக்குப்பதிலாக, இது கண்காணியர் பணியின் சரியானப் பயன்பாட்டைக்குறிப்பிடுகிறது. இது ஒரு பரிதாபமான விளக்கவுரையாகும். இந்த இரண்டு காரியங்களிலும் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டிய வெளிச்சத்தின் பிள்ளைகள், சிருஷ்டிகரோடு நெருங்கிய தொடர்பு இல்லாதவர்களிடமிருந்துக் கற்றுக்கொள்ள வேண்டியதாக உள்ளது. ஆயினும் ஒருவர் வாழ்க்கைக்குத் தேவையான முக்கிய பாடங்கள், எந்த எடுத்துக்காட்டின் மூலமாக காணப்பட்டாலும், அவைகளை உடனே கற்றுக்கொள்வது, அவருடைய தாழ்மையான நிலைக்கு நன்மையாக இருக்கும்.

"சத்தியத்தை எங்குக் கண்டாலும் உடனே அதை ஏற்றுக்கொள்ளுங்கள், எவ்வளவு முரண்பாடாக இருந்தாலும். மேலும் அதற்குப்பின், இந்தச் சத்தியத்தை மற்றவர்களிடமும் ஒத்திசைவாக எடுத்துக்கூறும் ஆற்றலின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாக இருங்கள். இயேசு வாக்களித்ததுபோல, சத்தியத்தின் ஆவி உள்ளவர்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தும்" (R8, 9).

# கிறிஸ்தவர்கள்மேல் நடக்கும் அடக்குமுறை

"அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2 தீமோத்தேயு 3:12).

உலக கண்காணிப்பு பட்டியலில் (WWL) கிறிஸ்தவர்களை அடக்குமுறைக்கு உட்படுத்தும் உலகின் மிக மோசமான இடங்களைப் பட்டியல் இடுகிறது. ஓப்பன் டோர்ஸ் என்னும் பத்திரிக்கை நிறுவனம் ஓப்பன் டோர்சின் 2016 உலக கண்காணிப்பு பட்டியலில் 50 நாடுகள் குறிக்கப்படுகிறது. இந்த எண்ணிக்கை 2015-ஆம் ஆண்டைவிட இரு மடங்காக மாறியிருக்கிறது. WWL–ன் ஆய்வின்படி இந்த அடக்கு முறைகள் மிக முக்கிய ஐந்து கோளங்களை பிரதிபலிக்கிறது. "தனிப்பட்ட வாழ்வில், குடும்ப வாழ்வில், சமூக வாழ்வில், தேசிய வாழ்வில் மற்றும் திருச்சபை வாழ்வில். எனினும் அடக்குமுறை என்பதைக் குறைவாக மதிப்பிடுதல் என்னும் பொதுவானப் பேச்சு இப்பொழுது அகற்றப்பட்டுள்ளது. ஓப்பன் டோர்ஸ் நிறுவனத்தின் ஆராய்ச்சி இயக்குநராய் இருக்கும் டாக்டர் ரோனால்ட் பாயிட் - மாக் மில்லன் விளக்குகையில்,"அடக்குமுறைகள் மிக அதிகமாய் இருப்பதால் சில முக்கிய இடங்களில் கிறிஸ்தவர்கள் சாட்சி சொல்ல பயப்படுகிறார்கள். இதன் காரணமாய் மிகக் குறைந்தளவில் வன்முறை நடக்கிறது. துன்பப்படுவதால்தான் பலர் சாட்சி சொல்ல வருகிறார்கள்.

### 2016 உலக பார்வை பட்டியலிலிருந்து சில முக்கிய கருத்துக்கள்:

❖ இஸ்லாமிய தீவிரவாதத்தைக் கண்டு அரசாங்கங்கள் பயந்து கீழே கூறப்பட்டுள்ள இரண்டு வகைகளில் பதிலளித்தது. (அ) தேசியவாதத்தைத் தூண்டிவிட்டு, அதைஎதிர்க்கும் சக்தியாகப் பயன்படுத்தியது (ஆ) அனைத்து மத வெளிப்பாடுகளின்மீதும் கட்டுப்பாடுகளை இறுக்கி கண்காணிப்பை அதிகரித்தது.

❖"சிலீப்பர்" செல்கள் - எதிர்க்கும் நிறுவனங்களுக்குள் ஊடுருவும் ஒரு சிறிய தீவிரவாத குழுக்கள் - பல பகுதிகளில் காணப்படுகிறது.

❖ சிறுபான்மையினர் வன்முறையாளர்களின் கைகளில் சிக்கித் துன்புறுவதால் பல மாநிலங்கள் சட்டத்திற்குப் புறம்பாகச் செயல்படுகின்றது.

சர்வதேச எல்லைகளில் விரிவடைந்துகொண்டிருக்கும் சுய பாணியில் இயங்கும் இஸ்லாமிய தீவிரவாத இயக்கமான காலிஙபேட்ஸ் என்பவர்களே 2016-இல் நடக்கும் பல கொடுமைகளுக்கு முக்கிய காரணமாவார். "யாரும் இதுவரை கண்டிராதளவுக்கு கிறிஸ்தவர்களின் சித்திரவதை மற்றும் அவர்களை நேரடியாகத் தாக்குதல் போன்றவைகள் பெருகி வருகின்றன" என்கிறார் ஓப்பன் டோர்ஸ் நிறுவனத்தின் ஒரு செய்தி தொடர்பாளர். உலகம் முழுவதிலுமுள்ள முஸ்லீம்கள் எங்கே தீவிரவாதிகள் தங்கள் பகுதிகளை எடுத்துக்கொள்வார்களோ என்ற அச்சத்தில் இருக்கின்றார்கள் மற்றும் முழு அரசாங்கமும் அந்தப் பயத்தில் செயல்படுகின்றன. மத்திய கிழக்கு, ஆப்பிரிக்கா மற்றும் மத்திய ஆசியா போன்ற பகுதிகளே தாக்குதலில் மிக வேகமாக வளர்ந்துகொண்டிருக்கிறது.

### மிக மோசமாகத் துன்புறுத்தும் மூன்று நாடுகள்:

வடகொரியா தற்போது 14 வருடமாக உலகக் கண்காணிப்பு பட்டியலில் தலைமை நிலையில் உள்ளது. 24.5 மில்லியன் மக்கட்தொகைகொண்ட அந்த நாட்டில், கிம் ஜாங் உன், எந்தவித மாற்றங்கள் அல்லது முன்னேற்றங்களைச் செயல்படுத்தாமல், தனது அதிகாரத்தை மட்டுமே தொடர்ந்து உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறார். 2015 அக்டோபர் மாதத்தில் ஆளும் கொரிய தொழிலாளர் கட்சியின் 70-வது ஆண்டு நிறைவு கொண்டாட்டத்தைத் தொடர்ந்து, அந்த நாட்டில் வெளியாகிக் கொண்டிருக்கும் செய்திகளின் உண்மை நிலையை நிர்ணயம் செய்வது கடினமாய் உள்ளது. அந்த அரசாங்கம் 300,000 சிறுபான்மை கிறிஸ்தவர்களை மிக அலட்சியமாய் கண்ணோக்குகிறார்கள். மேலும் கிறிஸ்தவர்கள் "மக்களின் அபினி" என்றும் கருத்து தெரிவிக்கிறார்கள் (மற்ற கம்யூனிஸ்ட் நாடுகள் கூறும் கருத்தைப்போலவே).

இரண்டாவது துன்புறுத்தும் நாடாக ஈராக் செயல்படுகிறது. இரண்டு நூற்றாண்டுகளாக கிறிஸ்தவர்கள் அங்கு வாழ்ந்துவருகின்றனர். ஆனால் இப்பொழுது 36 மில்லியனாக மக்கள் தொகைக் கொண்ட நாட்டில் அவர்கள் அழிவின் விளிம்பில் உள்ளனர். பல ஆண்டுகளாக ஈராக் ஒரு உருவமற்ற, ஒரு கலவரம் நிறைந்த உறுதியற்ற, மேலும் தனது சட்டத்தின் ஆட்சியைக்கூட செயல்படுத்துவதில் திறனற்ற, குறைந்தபட்ச பாதுகாப்புகூட அளிக்கமுடியாத அரசாங்கத்தின் கீழ் துன்புற்றுவருகிறது. வழக்கில் இருக்கும் அரை-தன்னாட்சியாய் திகழும் குர்திஸ் பிராந்தியம் மற்றும் தெற்கில் பெரிதாக எஞ்சியிருக்கும் அரபு பகுதிகளும் கலாச்சார ரீதியாகவும், மொழி ரீதியாகவும் வேறுபட்டுள்ளன. ஈராக்கின் எண்ணெய் வளம், குர்திஷ் மற்றும் அரபு ஈராக்கிற்கு இடையேயுள்ள எல்லை பகுதிகளான கிர்குக் மற்றும் மோசூலில் உள்ளன. ஈராக்கில் இருக்கும் இந்தப் பகுதிகளே மிகுந்த வன்முறை நிறைந்த பகுதிகளாய் இருக்கின்றன. கிறிஸ்தவர்கள் இரண்டு வெவ்வேறு போர் முனைகளில் சிக்கிக் கொண்டுள்ளனர். முதலாவதாக குர்திஸ் தன்னாட்சி நாட்டிற்காகவும் மற்றும் இரண்டாவதாக, நாட்டை முற்றிலும் இஸ்லாமிய நாடாக மாற்ற நினைத்து ஈராக்கில் மத சுத்திகரிப்பு செய்து கொண்டிருக்கிறது சில தீவிரவாத இயக்கங்கள்.

6.7 மில்லியன் மக்கள் தொகையுடன், அதிலும் மூன்றில் ஒரு பகுதி கிறிஸ்தவ தொகையுடன், ஆப்பிரிக்காவின் முனையில் எத்தியோப்பியாவின் வடக்கில் இருக்கும் எரித்திரியா என்னும் நாடே மூன்றாவது இடத்தில் இருக்கிறது. முற்றிலும் சர்வாதிகளும், எந்த சங்கத்திற்கோ மாறுபட்ட கருத்துகளுக்கோ மற்றும் சுதந்திர வெளிப்பாட்டுக்கோ சகிப்புத்தன்மையற்ற ஒரு குணத்தை வெளிப்படுத்தும் ஆட்சியாகவே அமைந்துள்ளது. மனித உரிமை சாதனைகளில், உலகிலேயே இந்த நாடு தான் மிகமோசமான அரசாங்கமாக திகழ்கிறது என்று மனித உரிமை கண்காணிப்பகம் கூறுகிறது. எல்லாவித தாம் சார்ந்த நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் இந்த அரசாங்கம், எரித்திரியாவின் ஆர்த்தோடாக்ஸ் சபையின் பாஸ்டரைக் கடந்த 2007-ஆம் ஆண்டு முதல் வீட்டுக்காவலில் வைத்திருக்கிறது. ஆப்பிரிக்காவின் முனையில் தீவிரமாய் இஸ்லாம் பரவுவதை, எரித்திரியா தொடர்ந்து ஆதரிக்கிறது. மத சுதந்திரத்தை மிகத் தீவிரமாக மீறுவதால், இரண்டு ஆப்பிக்க நாடுகளில் எரித்திரியாவும் ஒரு "குறிப்பான கவலைக்குரிய நாடு" என்று அமெரிக்காவின் அரசுமுறை நியமனம் செய்கிறது. அகதிகள் நெருக்கடிகளில் இது உலகில் முக்கிய பங்களிக்கின்றது. அதில் ஒரு அகதி, "அது ஒரு ஜீவிக்க முடியாத நாடாக உள்ளது" என்று கூறுகிறார்.

ஐம்பது நாடுகளை மதிப்பீடு செய்தலில், கிறிஸ்தவ அடக்குமுறையில் பஹ்ரைன், நைஜீரியா, ஓமன் ஆகிய மூன்று நாடுகள் "மோசமான சிறந்த நாடு" என்று மதிப்படப்படுகின்றன.

**உண்மையாய் கிறிஸ்தவ கொடுமைகள்:**

"இந்தப் பகைமை நிறைந்த உலகில், தேவ மக்களின் புனித மற்றும் சாட்சியுள்ள வாழ்வை தொடர்வது வெறுப்பு மற்றும் துயரமே. ஏசாயா போன்று பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசன புத்தகங்களில் இந்தக் கருத்து வலியுறுத்தப்படுகின்றது. தேவ ஜனங்கள் துன்பப்படுவார்கள் என்று புதிய ஏற்பாடும் போதிக்கிறது" என்று துன்புறுத்தலைக்குறித்து நெல்சனின் வேதாகம அகராதி விவரிக்கிறது.

இன்று மனித உரிமை செயல்பாடுகள் ஒரு குழுவை துன்புறுத்துதல் வருந்தத்தக்க செயலாக எண்ணுகிறது. அவருடைய உண்மையான சீஷர்கள் சபைகளில் கையளிக்கப்பட்டு, ஜெப ஆலயங்களில் சாட்டையால் அடிக்கப்படுவார்கள் என்று கர்த்தர் முன்பே எச்சரித்திருந்தார் (மத்தேயு 10:17). அவர்கள் ஆளுநர்கள் மற்றும் இராஜாக்கள் முன்பாக இழுத்துச் செல்லப்படுவார்கள் (வசனம் 18). இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும் வகையில், உண்மையான கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டு மற்றும் மரணத்திற்குச் சாட்சிகளாகவே இருந்து வருகின்றனர்.

கிறிஸ்துதாமே பலவித அடக்குமுறைகளில் துன்பப்பட்டார் (யோவான் 5:16, 11:47-53, 15:18-20; மத்தேயு 27:2, 26-30). பெந்தெகொஸ்தே நாளைத் தொடந்து, கிறிஸ்துவே மேசியா என்றும் அவர் மூலமே உண்மையான இரட்சிப்பு என்று அறிக்கையிட்டதற்காக அப்போஸ்தலர்கள், யூதர்கள் மற்றும் புஜாதியினரால் துன்புறுத்தப்பட்டார்கள். இயேசு மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டாரென்று சான்று பகர்ந்ததினிமித்தம்

இயேசுவின் சீஷர்கள், கைது செய்யப்பட்டு, அச்சுறுத்தப்பட்டு, அடிக்கப்பட்டார்கள் (அப்போஸ்தலர் 4). எருசலேம் பட்டணத்து திருச்சபையில் ஊழியராய் இருந்த ஸ்தேவான், பிடிக்கப்பட்டு, ஆலோசனை சங்கத்திற்கு முன்பாகக் கொண்டுவரப்பட்டு, கல்லெறிந்து மரணத்திற்கு உட்படுத்தப்பட்டார் (அப்போஸ்தலர் 6:11-7:60). சவுல், ஆதி கிறிஸ்தவர்களை வெகுவாய் துன்புறுத்தினாலும், பின்னர் கிறிஸ்துவால் மனம் மாற்றப்பட்டு தானே பல துன்பங்களை அனுபவித்தார்.

ரோம பேரரசர்களாகிய நீரோ மற்றும் டையோகிளிஷியனும் கிறிஸ்தவ மார்க்கத்தை அழிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தனர்.டையோகிளிஷியனின் ஆட்சியின்போது 20,000-க்கும் மேற்பட்ட கிறிஸ்தவர்கள் இறந்தனர். பின்னர் துன்பங்கள் அரசாங்கத்தால் மட்டுமல்லாமல் ஆளுகை செய்யும் கிறிஸ்தவ கோஷ்டிகளாலும் வரத்துவங்கியது. போப்பின் ஆட்சியின்போது (539-1799 கிபி) திருச்சபையை எதிர்த்த யாவருக்கும் வலிமையான மற்றும் சோகமான தாக்குதல்கள் ஏற்பட்டது (தானியேல் 7:25). ஸ்பானிஷ் இன்குவிஸ்டர் டார்க்குமேடா மட்டுமே, போப்பை எதிர்த்த 10,220 பேரை எரித்தார்.

அப்போஸ்தலர் பவுல் கூறும்பொழுது, "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம்போக்குகிறவர்களாகவும், மோசம் போகிறவர்களாகவுமிருந்து மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்" (2 தீமோத்தேயு 3:12, 13). கிறிஸ்துவின் உண்மையான சீஷர்கள் துன்பத்தைச் சகித்து (1 பேதுரு 3:14-17) அதைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ள வேண்டுமென கூறப்பட்டுள்ளார்கள் (2 கொரிந்தியர் 12:10). எபிரெயரில் விசுவாசம் மற்றும் நீடித்த பொறுமையின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகிறது (எபிரெயர் 10:37-39).

## நம்மைத் துன்புறுத்துபவரை நேசித்தல்

தன்னைத் துன்புறுத்துபவரிடம் பகைமை உணர்வற்று இருக்க வேண்டுமென்று தனது சீஷர்களுக்கு கிறிஸ்து கட்டளையிட்டார். அதற்குமேலாக அவர்களிடம் அன்பை வெளிப்படுத்த வேண்டும் என்றும் கட்டளையிட்டார் (மத்தேயு 5:44, 45, 48). "பூரணசற்குணம்" என்ற வார்த்தையானது, மனரீதியான மற்றும் ஒழுக்க ரீதியான குணலட்சணங்களின் வளர்ச்சியில் "முழுமை" என்று அர்த்தப்படுத்தக்கூடிய ஒரு கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இயேசு விவரித்தவகையில் நாம் துன்பங்களின் மத்தியில் செயல்படவில்லை என்றால், நம்மில் வளரும் நம் குணம் முழுமை பெறாது. நம்மைத் துன்புறுத்துபவரை ஆசீர்வதிக்க வேண்டுமென்று பவுல் கூறுகிறார் (ரோமர் 12:14).

எனினும் நம்மை நிரூபிக்கும்வகையில் நாம் துன்பங்களை நாடிச் செல்லக்கூடாது என்று கர்த்தர் அறிவிக்கிறார் (மத்தேயு 10:16). "நாம் முட்டாள்தனமான எந்தக் காரியத்தையும் செய்துவிடக்கூடாது, பிரச்சனைகளை கிளறிவிடும்படியாக வீதிகளில் நடந்துக்கொள்ளக்கூடாது, நாம் தெளிந்த புத்தியின் ஆவியாகிய தயவு, சாந்தம், பொறுமை, சகோதர சிநேகம் மற்றும் அன்பைப் பிரயோகிக்க வேண்டும்" (R5846)

இயேசுவின் சீஷர் தேவனுடைய உண்மையான வார்த்தைகளை அன்புடனும், அறிவுறுத்தும் நோக்குடனும் எடுத்துக்கூறுகையில் அவர் துன்புறுத்தப்பட்டால் தாவீது செய்ததுபோல் அவர் முழுவதுமாக தேவனின் பலத்திலேயே சார்ந்திருக்க வேண்டும். "என் தேவனாகிய கர்த்தாவே, உம்மில் அடைக்கலம் புகுகிறேன்; என்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் எல்லாருக்கும் என்னை விலக்கி இரட்சியும்" (சங்கீதம் 7:1). பவுல் சொல்வதுபோல் "கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? - உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ" (ரோமர் 8:35-39). இந்த யுகம் முடியும் தருவாயில் இருக்கும் இந்த நிலையில் எத்தகைய கூடுதல் துன்பங்கள் இந்தப் பூமியெங்கும் பரவும் என்று நமக்குத் தெரியாது. எல்லோருக்கும் இரட்சிப்பின் உண்மையான செய்தியை பரப்புவதில் நம்முடைய கவனத்தை ஒருமுகப்படுத்தி, முடிவுமட்டும் பொறுமையோடு செயல்படுவோமாக.